


# ஸ்ரீ ராமாநுஜன்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய தத்துவங்களை யுணர்த்த
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை

II



கள்ளார்பொழில் தென்னரங்கன் * கமலப்பதங்கள் நெஞ்சில்
கொள்ளாமனிசரை நீங்கி * குறையல் பிரானடிக்கீழ்
விள்ளாதவன்ப னிராமாநுசன் மிக்க சீலமல்லால்
உள்ளாதென்னெஞ்சு * ஒன்றறியே னெனக்குற்ற பேரியல்வே.


மதராஸ்

ஸத்கிரந்த பிரகாசன சபையின் வெளியீடு

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

Edited Printed & Published by S. R. Varadarajan, B. A., for
Madras Sathgrantha Prakasana Sabha, at Sri Lakshmi Printing Works,
Car Street, Salem. Editor: P. B. Annangaracharya Swami.


http://acharya.org

ஸ்ரீ:

# ஸ்ரீராமாநுஜன்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய தத்துவங்களை
யுணர்த்த
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை
[மதராஸ் ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையின் வெளியீடு]
ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்.

முதல் தொகுதி | 10—10—1948 | 2-வது பகுதி

## ஸ்ரீ ராமாநுஜன்

இப்பத்திரிகை ஸ்ரீ ராமாநுஜன் 'திருநாமம் பூண்டிருப்பதனால் ஒவ்வோரிதழிலும் தலையான வியாஸமும் ஸ்ரீ ராமாநுஜரைப்பற்றியே அமையவேண்டுமென்பது எமது நோக்கம். உலகுக்கு ஒருயிரான அப்பேராசிரியருடைய திருக்குணங்களைப்பற்றியோ திவ்ய சரிதையைப்பற்றியோ, அவரது ஸ்ரீஸூக்திகளிலுள்ள விசேஷங்களைப்பற்றியோ ஏதேனுமொருவகையில் அவருடைய ஸம்பந்தமான வியாஸம் முகப்பில் அமைந்து தீரும். முன்னிதழின் தலையில் வெளியிட்டுள்ள இராமாநுச நூற்றந்தாதிப் பாசுரம் "நெஞ்சே சொல்லுவோமவன் நாமங்களே" என முடிவுபெற்றிருத்தலால் அந்த ஸ்ரீ ராமாநுஜத் திருநாமத்தின் பொருள் விசேஷங்களைப்பற்றி இங்கு அநுபவிக்கவிரும்புகின்றோம்.

இவ்வாசிரியர்க்கு இந்தத் திருநாமம் எதனால் இடப்பட்டதென்று ஆராயுமளவில், முன்னோர்களுடைய நூல்களிலிருந்து இங்ஙனே அறியலாகிறது;— ஸ்ரீ ராமாநுஜனென்னுஞ் சொல் ஸ்ரீராமபிரானுடைய தம்பி யென்னும் பொருள்கொண்டது; தசரதாத்மஜனான இராமபிரானுக்கு இளையோனாக அவதரித்த லக்ஷ்மணன் என்றபடி. அவன் இடைவீடின்றிக் கைங்கரியமே போதுபோக்காக இருந்தது போல ஸ்வாமி உடையவரும் கைங்கரியத்தையே பெருஞ் செல்வமாகக்கொண்டிருக்கப்போகிறாரென்பதை அவதார ஸமயத்திலேயே யோகத்ருஷ்டியினாலறிந்தவரும் இவர் தமக்கு மாதுலருமான திருமலைநம்பியென்னு மாசிரியர் இவர்க்கு இராமாநுசனென்று நாமகரணஞ் செய்தருளினர்—என்பதாக.

ஸ்ரீராமபிரான் கைகேயியின் வரப்ரார்த்தனையை நிறைவேற்றும் வியாஜமாகக் கானகஞ் செல்லப் புறப்படும்போது இளையோனான இலக்குமணன் தானும் நிர்ப்பந்தித்துத் தன்னையும் உடனழைத்துச் செல்லும்படி வேண்டினன். தானும் காட்டுக்கு வர விரும்பியது எதற்காகவென்னில்; *பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரி ஸாநுஷு ரம்ஸ்யதே, அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதச் ச தே*

http://acharya.org

என்பது அப்போது இவ்விளைய பெருமாளுடைய வார்த்தையாக ஸ்ரீ ராமாயணத்தில் உலகறிய நிற்கும் ச்லோகம். "தேவரீர் பிராட்டியோடுகூட சித்திரகூடத்தாழ்வரை முதலானவிடங்களில் இன்புறும்போது அடியேன் ஒழிவில்காலமெல்லாமுடனுய்மன்னி வழுவிலாவடிமைகள் செய்யப்போகிறேன்" என்பது மேலே குறித்த ச்லோகத்தின் கருத்து அப்படியே அவ்விளையோன் தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் அடிமையெனும் அத்தாணிச் சேவகஞ் செய்தே கழித்தனன். அதுபோலவே ஸ்வாமி உடையவரும் தம் வாழ்நாள் முழுவதையும் தொண்டுபூண்டமுதமுண்டே கழித்தருளினரென்பது அவரது திவ்விய சரிதையினால் மிகப் பிரசித்திபெற்ற விஷயம். தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்ததும் மாறனுரைசெய்த தமிழ்மறை வளர்த்ததும் முதலானவை ஒப்புயர்வற்ற கைங்கரியங்களன்றோ. ஆக இக்காரணம்பற்றியே ஸ்வாமிக்கு ராமாநுஜனென்னுந் திருநாமமிடப்பட்டதென்பது மிகப் பொருத்தம். லக்ஷ்மண முநி யென்றும் இளையாழ்வா ரென்றும் வழங்குகின்ற இவரது திருநாமங்களும் இதனை வற்புறுத்தி நிற்கும்.

இனி, ராமாநுஜனென்ற திருநாமம் லக்ஷ்மணனுக்குப்போலவே கண்ணபிரானுக்கும் பொருந்தியதே. 'பலராமனுடைய தம்பி' என்னுங் காரணத்தினால் கண்ணபிரானை ராமாநுஜனென்னக் குறையில்லையன்றோ. ஆனதுபற்றியே முகுந்தமாலை யென்னும் உலகமறிந்த ஸ்தோத்திரத்தில் "ஹே ராமாநுஜ ஹே ஜகத்த்ரய குரோ! ஹே புண்டரீகாக்ஷ மாம் ஹே கோபீஜந நாத பாலய" என்று ராமாநுஜனென்ற திருநாமத்தினாலேயே கண்ணபிரான் அழைக்கப்பட்டுள்ளான். ஆகவே கண்ணபிரானுடையதான அந்தத் திருநாமமே ஸ்வாமி உடையவர்க்குச் சாத்தப்பட்டதென்று கொள்ளுகிற ஸம்பிரதாயமும் ஒன்றுண்டு. ஸ்ரீநிகமாந்த தேசிகன் பணித்த யதிராஜ ஸப்ததியில் "சமிதோதய சங்கராதிகர்வ: ஸ்வபலாத் உத்த்ருத யாதவப்ரகாச:, அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந் நநு ராமாவரஜஸ் ஸ ஏஷ பூய:" என்ற ச்லோகம் இதற்கு ஆதாரமாக அவதரித்ததாகும்.

கண்ணபிரானுக்கும் உடையவர்க்கும் பல படிகளாலும் ஸாம்யமுண்டு. கண்ணபிரானாகத் தோன்றின பகவான் செய்த செயல்களும் ஸ்ரீராமாநுஜர் செய்தருளின செயல்களும் ஒத்திருக்கையாகிற ஒற்றுமைநயம் ஈண்டு நிரூபிக்கப்படுகிறது. மேலே யெடுத்துக்காட்டிய சமிதோதய சங்கராதிகர்வ: இத்யாதியான யதிராஜஸப்ததிச்லோக ரத்னத்தில் கண்ணனுக்கும் உடையவர்க்கும் ஸாம்யம் ச்லேடையினால் நிர்வஹிக்கப்பட்டுளது: அது வடமொழிக்கடலில் ஆழ்ந்தவர்கட்கே ரஸிக்கக்கூடியது. இங்கு நாம் நிரூபிக்கும் ஒற்றுமை சரித்திரப்போக்கில் ஸம்பந்தப்பட்டதாகும். கேண்மின்;—

1. கண்ணபிரான் திருவவதாரஞ் செய்த இடம் சிறைக்கூடம் என்பது உலகமறிந்தது. ஸ்ரீராமாநுஜர் அவதரித்த இடமும் சிறைக்கூடமே. எப்படியெனில்; *அமரரோடு உயர்விற் சென்று அறுவர்தம் பிறவி யஞ்சிறையே* [திருவாய்மொழி 1-3-11] என்ற நம்மாழ்வார் திருவாக்கின்படி இந்த ஸம்ஸார மண்டலமே ஒரு சிறைக்கூடமன்றோ. இஃது *இருள்தருமா ஞாலமாதலால் இருள் மலிந்த விடத்தே வந்து பிறந்தார் ஆசாரியர், கண்ணனும் *இருள் நாள் பிறந்த வம்மான்* என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தின்படியும் *வேண்டித் தேவரிரக்கவிங்கிருள்வாய் வந்து பிறந்ததும்* என்ற நம்மாழ்வார் பாசுரத்தின்படியும் இருள்மலிந்த போழ்தன்றோ பிறந்தது.

2. கண்ணபிரான் அவதரித்தபோது *ஜாதோஸி தேவதேவேச! சங்கசக்ரகதாதர!* என்கிறபடியே சங்கொடு சக்கரமேந்துந் தடக்கையனாகவே சுடர்விளக்கத்தோடு திருவவதரித்தான். ஆசாரியர் அவதரிக்கும்போதும் நம் போலியரைப்போலே அழுதல் அரற்றுதல் செய்யாதே மிக்க ஞான வெள்ளச் சுடர் விளக்கத்தையே காட்டிக்கொண்டு அனைவரும் வியப்புறுமாறு அவதரித்தார். கண்ணபிரான் பிறந்தவிடம் ஒன்று; இளமையில் வளர்ந்தவிடம் வேறொன்று; பிறகு வளர்ந்தவிடம் மற்றொன்று. (அதாவது) வடமதுரையிலே பிறந்தது; திருவாய்ப்பாடியிலே இளமையில் வளர்ந்தது; பிறகு முதுமையில் த்வாரகை

http://acharya.org

முதலான விடங்களில் வளர்ந்தது. ஆசாரியரும் பிறந்தது ஸ்ரீபெரும்பூதூரில்: இளமையில் வளர்ந்தது காஞ்சீபுரியில்: பிறகு வளர்ந்தது ஸ்ரீரங்கம், திருநாராயணபுரம் முதலான விடங்களில். [மற்றொரு வகையுமுண்டு;] ''திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து'' என்கிற நம் முன்னோர்களின் முதுமொழியின்படியே திருவஷ்டாக்ஷர மஹா மந்திரத்தினால் ஸ்வரூபவுணர்ச்சி பெறுதலாகிற பிறவியைப்பெற்று, த்வயம் என்கிற மந்த்ரத்தின் அநுஸந்தானத்தையும் அதன்படி அனுட்டானத்தையுமே செல்வவாழ்ச்சியாகக்கொண்டிருப்பவரென்க பிறக்குமிடம் திருமந்த்ரம்; வளருமிடம் த்வயம்—ஆகையாலே இதனால் கண்ணனோடு ஒப்புமை

3. கண்ணபிரான்பிறந்த வயிற்றில் இவனொருவனே பிறக்கவில்லை; *மக்களறுவரைக் கல்லிடைமோத இழந்தவள்தன் வயிற்றில், சிக்கன வந்து பிறந்து நின்றாய்* [பெரியாழ்வார் திருமொழி 5-3-1.] என்கிறபடியே மற்றும் பல மக்கள் பிறந்தாருண்டு; ஆனால் அந்தப் பிள்ளைகளினால் உலகுக்கு யாதோருதவியும் நேர்ந்ததில்லை; அவர்கள் பிறந்ததும் இறந்ததுமே தெரியவருகின்றது. இதுபோல, ஆசாரியர் திருவவதரித்த இவ்வுலகத்தில் மற்றும் பலபேர்களும் ஒக்கப்பிறக்கின்றார்களெனினும் அவர்களால் உலகுக்கொரு நன்மையுமில்லையாயிற்று. அவர்களின் பிறப்பும் இறப்புமேதான் உலகுக்குத் தெரியும்.

4. கண்ணபிரான் வடமதுரையில்நின்றும் திருவாய்ப்பாடிக்கு எழுந்தருளும்போது ''வஸுதேவோ வஹந் க்ருஷ்ணம் ஜாநுமாத்ரோதகோ யயௌ'' என்னும்படி பேராழமான பெருவெள்ளமும் முழந்தாளளவாக வற்றிப்போயிற்றென்று தெரியவருகிறது. அதுபோல, ஆசாரியர் சிறிது ஸஞ்சரிக்கத் தொடங்கும்போதே ''பிறவியென்னுங் கடலும் வற்றிப் பெரும்பதமாகின்றதால்'' என்ற பெரியாழ்வார் திருவாக்கின்படியே ஸம்ஸாரமாகிற பெருங் கடலும் வற்றத் தொடங்குமென்க.

5. பராத்பரனை பெருமான் தனது பெருமைகளை யெல்லாம் மறைத்து அடக்கிக்கொண்டு நீறுபூத்த நெருப்புப்போலேயாகி இடக்கை வலக்கை யறியாத ஆயர்களோடே கலந்து பழகினன்: அதுபோல ஆசாரியரும் மிகுஞானச் சிறு குழவியாய்த் தமது ஞான சக்திப் பெருமைகளையெல்லாம் மறைத்துக்கொண்டு அறிவிலா மனிசரோடே கலந்து பழகியிருந்தனர் கண்ணன் இடையர்களோடுமாத்திரம் கலந்து பழகியிருந்தானல்லன்; தன்னை வதைக்க வழிபார்த்திருந்த ஆஸுரப்ரக்ருதிகளோடும் கலந்திருந்து காலங்கழித்தனன். ஆசாரியரும் தம்மை மாய்க்கவெண்ணின யாதவப்ரகாசர்போல்வாரிடத்திலும் கலந்திருந்து காலங்கழித்ததுண்டே.

6. வளர்ந்தருளுமிடத்தில் தீயபுந்திக் கஞ்சனால் ஏவப்பட்ட பூதனை தாய்வேஷம் பூண்டுவந்து நஞ்சுதீற்றிய முலையை உண்ணக் கொடுத்துக் கண்ணனைக் கொல்ல முயன்று தானே முடிந்துபோனாள். இந்தப் பூதனையின் வரலாற்றைப் பேசுகின்ற தேசிகர் யாதவாப்யுதயத்தில் *கம்ஸப்ரயுக்தா கில காபி மாயா* என்று மாயை யென்கிற சொல்லால் கூறினர். மாயை யென்று மூலப்ரக்ருதிக்குப் பெயர். அது உண்மையில் விஷம்போன்றதாயிருக்கச் செய்தேயும் தன்னிடத்தில் போக்யதா புத்தியை யுண்டுபண்ணிக்கொண்டு தன் பக்கலிலே யீடுபடுத்தி நம்போல்வாரை முடிக்கப்பார்க்கிறது. இப்படியே ஆசாரியரையும் முடிக்கப் பார்க்கையில் அவரை முடிக்கமாட்டாமல் அவரது அளவற்ற பெருமையினால் தானே முடிந்து நிற்கிறது.

7. *கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி* [திருப்பாவை—6] என்றபடி அஸுராவேசம் பெற்றவொரு சகடத்தைக் கண்ணன் திருவடிஸ்பர்சத்தால் நொறுக்கி முறித்து முடித்தனன் என்பது ப்ரஸித்தம். ஆசாரியரும் தமது திருவடி ஸ்பர்சத்தினால் சகடபங்கஞ் செய்தவரே (எப்படியென்னில்) ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோகும் ஸாதனம் சகடமெனப்படுவது. இங்கிருந்து நாம் அப்பால் செல்லப் பல வழிகளுண்டு; நரகம் சுவர்க்கம் முதலானவற்றின் வழிகளிற் கொண்டு செல்லுவது கள்ளச் சகடமாகும்; ஆசாரியருடைய திருவடி ஸம்பந்தத்தினால் அது தொலைந் தொழிந்ததேயாம் அர்ச்சிராதி

http://acharya.org

மார்க்கமாகிய நல்வழியிற் செல்லும் ஸாதனமே மேம்பட்டுத் தீயவழிகளிற் செல்லும் ஸாதனம் சிதைந்தொழியுமென்க.

8. கயிற்றினால் கட்டி ஒருரலிலே பிணித்துவிடப்பெற்ற கண்ணன் அவ்வுரலையுமிழுத்துக்கொண்டு தவழ்ந்து இரட்டை மருத மரங்களின் நடுவே யெழுந்தருளியபொழுது அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டபடியினாலே அந்த இரட்டை மரங்களிரண்டும் முறிந்து விழுந்தனவாக யமளார்ஜுன பங்க விருத்தாந்தமுள்ளது. இணைபிரியாதே நின்ற இரட்டை மருத மரங்கள்போல இணைபிரியாது நின்று நம்மை நலியுமவை பலவுண்டு. பகவத் கீதையில் நான்காவது அத்யாயத்தில் *த்வந்த்வாதீதோ விமத்ஸர:* என்றும், ஏழாவது அத்தியாயத்தில் த்வந்த்வமோஹேந பாரத என்றும், பதினைந்தாமத்யாயத்தில் *த்வந்த்வைர் விமுக்தாஸ் ஸுக து: க்கஸம்ஜ்ஞை:* என்றும் இப்படி பலவிடங்களில் த்வந்துவம் (இரட்டை) என்று பல சொல்லப்பட்டுள்ளன; இன்பு துன்பு, அஹங்கார மமகாரம், காமக்ரோதம், புண்ணிய பாபம் ...என்னு மிவையெல்லாம் இரட்டைகளாம். இவையெல்லாம் ஆசாரியர் திருவடி ஸம்பந்தம் பெற்றவளவிலே இற்றொழிந்தனவென்க.

9. *வையமேழுங் கண்டாள் பிள்ளை வாயுளே* என்றும் *வாயுள் வையகங்கண்ட மட நல்லார்* என்றும் சொல்லுகிறபடியே கண்ணபிரான் தனது திருவாயில் எழுலகங்களையும் அன்பர்களுக்குக் காட்டினன். அதுபோல ஆசாரியரும் 1. ச்ருதிகள், 2 ஸ்மிருதிகள், 3 இதிஹாஸங்கள், 4 புராணங்கள் 4 பாஞ்சராத்ரங்கள், 6 ஆழ்வாரருளிச் செயல்கள், 7 ஆசார்ய திவ்யஸூக்திகள் ஆகிய ஏழையும் தமது திருவாக்கில் அன்பர்கட்குக் காட்டினர்.

10. யமுனையாற்றில் ஓர் மடுவில் இருந்துகொண்டு அம்மடு முழுவதையும் தன் விஷாக்கினியினால் கொதிப்படைந்த நீருள்ளதாக்கிப் பெருங்கேடு விளைத்த காளியனென்னுங் கொடிய நாகத்தைக் கண்ணபிரான் கொழுப்படக்கினான். இவ்வரலாற்றை யாதவாப்யுதய காவியத்தில் தேசிகர் கூறுமிடத்து (4-125) ஸ்ரீராமாநுஜர் செய்தருளின செயலையே உவமையாகக் காட்டியருளினர் ஐந்தலைவாய் நாகமாகிய காளியன் யமுனையாற்றைக் கலக்கிக் கெடுத்தது—விஷவாக்குக்களான புறமதத்தவர்கள் மனம் போனபடியெல்லாம் கூறும் தவறான பொருள்களாலே வேதங்களைக் கெடுத்தபடியாம். அந்தக் கெடுதியைக் கண்ணபிரான் நீக்கி யமுனையை எல்லாரும் இனிமையாகப் பருகும்படி செய்தது—ஆசாரியர் தவறான பொருள்களை நீக்கி நல்ல பொருள்களை வெளியிட்டு வேதத்தை ஸத்துகளுக்கு உபஜீவ்யமாக ஆக்கினபடியாம். யமுனையின் ஸ்தானத்தில் வேதம்; காளியன் ஸ்தானத்தில் குதர்க்கவாதிகள்; கண்ணன் ஸ்தானத்தில் ஆசாரியர். *தூயபெரு நீர் யமுனைத் துறைவனை* என்னும்படி யமுனையாறு இடையறாத பகவத் ஸம்பந்தத்தை யுடையதாயிருந்ததுபோல வேதமும் பகவத் ஸம்பந்தத்தை நியதமாக வுடைத்தாயிருக்கும்.

காளியன் ஐந்து தலைகளாலும் நஞ்சை யுமிழ்ந்து நாசம் விளைவித்ததுபோல புறமதத்தவர்கள், ஐந்துவிதமான துர்வாதங்களாலே நாசத்தை விளைவிக்கின்றனர்; (எப்படி யென்னில்) 1 ஈச்வரனே யில்லையென்னுதல், 2 ஈச்வரன் உண்டெனினும் அவன் அநுமானத்தால் ஸித்திப்பவனேயன்றி சாஸ்திரத்தால் ஸித்திப்பவனல்லன் என்னுதல் 3 சாஸ்திரங்களைக்கொண்டே ஈச்வரனை யங்கீகரித்தும் அவனுக்குக் குணங்களும் விக்ரஹமும் இல்லை யென்னுதல் 4. ஈச்வரன் ஒருவனே யென்பதில்லை, பல ஈச்வரர்கள் உண்டென்னுதல், 5. பிரபஞ்சமேயில்லை—ஸர்வம் சூன்யம் எனல். ஆக இப்படிப்பட்ட ஐவகையான அபார்த்தங்களினால் புறமதத்தவர்கள் வேதங்களைக்கெடுக்க, அந்தக் கெடுதல்களை ஆசாரியர் போக்கியருளினர். காளியன் தலையிலே கண்ணபிரான் அடியிட்டு நடனம் புரிந்தாப்போலவே *நாவலிட்டுழிதருகின்றோம் நமன் தமர் தலைகண்மீதே* (திருமாலை—1) என்ற கணக்கிலே கூத்தாடப் பெறுதலுங்காண்க.

http://acharya.org

11. குதிரை வடிவங்கொண்டு மஹாபயங்கரனாகவந்த கேசி யென்னு மஸுரனைக் கண்ணபிரான் தொலைத்தருளினன்; அதுபோல நம் பேராசிரியர் *இந்த்ரியாணி ஹயாநாஹு:* என்ற உபநிஷத்தின்படியே குதிரைகளாகச் சொல்லப்பட்ட இந்திரியங்களின் வலியையடக்கி ஜிதேந்த்ரியராய் *காமாதிதோஷஹராமாத்மபதாச்ரிதா நாம்* என்றும் *மதநகதநைர் நக்லிச்யந்தே யதீச்வராஸம்ச்ரயா:* என்றும் சொல்லும் படி வாழ்ந்தவர்.

12. கம்ஸனால் ஏவப்பட்ட அசுரர்களில் ஓரசுரன் விளாமரத்தின் வடிவமாய், தன் கீழே கண்ணன் வரும்போது மேல்விழுந்து கொல்வதாக எண்ணிவந்து நிற்கவும், மற்றோரசுரன் கண்ணனை முட்டிக் கொல்லும்பொருட்டுக் கன்றின் வடிவங்கொண்டு நிற்கவும் இவற்றையறிந்த கண்ணபிரான் "விளவின் காய் கன்றினால் வீழ்த்தவனே" "கன்றுகொண்டு விளங்கனி யெறிந்து" என்கிறபடியே கன்றைச்சுழற்றி விளவின்மீதெறிந்து இரண்டையும் ஒருசேரமுடித்தருளினன் என்றவரலாறு முள்ளைக்கொண்டே முள்ளைக் களைகின்றபடியைக் காட்டுகின்றது. இதுபோலவே ஸ்வாமி ஸ்ரீபாஷ்யகாரர் புறமதங்களைக் கண்டிக்குமிடத்து அவை பரஸ்பரவ்யாஹதங்களாயிருக்கும்படியை நன்கு நிரூபித்துக்காட்டி அவைகளைக்கொண்டே அவற்றை மறுத்தொழிப்பவர்.

13. இடையர்கள் வழக்கப்படி இந்திரனுக்குப் பூஜை செய்யப் பற்பல வண்டிகளில் சோறும், தயிரும், நெய்யும், காய்கறிகளும் சேகரிப்பதைக்கண்டு கண்ணன் அப்பூசனையனைத்தையும் கோவர்த்தனமலைக்கே இடும்படி கட்டளையிட்டுத் தானே ஒரு தேவதா ரூபங்கொண்டு அவற்றை முற்றும் அமுதுசெய்தருள, இந்திரன் பசிக்கோபத்தினால் மேகங்களை ஏவிக் கடூரமான கல்மழையை எழு நாள் பெய்விக்க, அதனால் யார்க்கும் யாதொரு தீங்கும் நேரிடாதபடி கண்ணன் அம்மலையையே குடையாக வெடுத்துப்பிடித்து நின்றனன் என்பது ப்ரஸித்தமான கதை. தேவதாந்தரத்திற்கு வழிபாடு செய்வதைப் பொறாத தன்மையும் அந்த வழிபாடுகளையெல்லாம் தானே யேற்றுக்கொள்ளுந்தன்மையும், அதனால் எதிரி என்ன தீங்கு செய்ய நினைத்தாலும் அதற்குப் பிரதியாகத் தீங்கிழைக்க நினையாத பெருந்தகவும், தன்னையடுத்தவர்களைத் தான் ரக்ஷித்துக்கொண்டு நிற்றலுமாகிய விஷயங்கள் இவ்விதிஹாஸத்தில் கிடைக்கின்றன. *மறந்தும் புறந்தொழாமாந்தர்* என்றிருக்குமாசிரியர் தேவதாந்தரபஜனத்தைச் சிறிதும்ஸஹியார். "திருவில்லாத்தேவரைத் தேறேல்மின் தேவு" என்று துணிந்து உபதேசிப்பர். *ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா* என்றும் *பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகிவந்து* என்றுஞ் சொல்லுகிறபடியே எம்பெருமானே ஆசாரியனாக வந்து பிறந்ததனால் ஆராதனைகளெல்லாம் ஆசார்யனுக்கே சேரும். "குற்றஞ்செய்தவர்கள்பக்கல் பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகாரஸ்ம்ருதியும் நடக்கவேணும்" [ஸ்ரீவசநபூஷணம் 365] என்றிருப்பவர் ஆசார்யராகையாலே தீங்கிழைப்பார் திறத்திலும் பிரதியாகத் தீங்கிழைக்க நினையார் பெருமழையில் நின்றும் கண்ணன் காத்தருளினதுபோல *அவிவேக கநாந்த திங்முகே பஹுதா ஸந்தததுஃக்கவர்ஷிணி — பவதுர்த்திநே* [ஸ்தோத்ரரத்நம்-49] என்னப்பட்ட பெருமழையில் நின்றும் (அதாவது, ஸம்ஸாரத் துயர்ப் பெருமழையினின்றும்) காத்தருளினா. கண்ணன் எழுநாள் காத்தனன். ஆசிரியர் காப்பது எழேழ் பிறவிக்கும்.

14. கண்ணன் நப்பின்னைப் பிராட்டியை மணஞ்செய்துகொள்ளுதற்காக, அவளது தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி அஸுராவேசம்பெற்ற எழு எருதுகளை வலியடக்கி அப்பிராட்டியை மணஞ்செய்துகொண்டனன். நம் பரமாசார்யர் "எட்டிழையாய் மூன்று சரடாயிருப்பதொரு மங்கள ஸூத்ரம் போலே திருமந்த்ரம்" [முமுக்ஷுப்படி 113] என்கிறபடியே திருமந்த்ரமாகிற திருமங்கலியத்தை சேதநர்களுக்குக் கட்டி விவாஹம் நடத்துகைக்கு அங்கமாக, காமம், குரோதம், லோபம், மோஹம், மதம் மாத்ஸர்யம் அஸூயை என்கிற எழு விரோதிகளையும்தொலைத்தருளினர்

http://acharya.org

15. கண்ணன் இரண்டு மல்லர்களை மடித்ததுபோல ஆசிரியர் *நீர்நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து* என்கிறபடியே அஹங்கார மமகாரங்களை யடியறுத்தவர். கண்ணன் குவலயா பீடமென்கிற மதயானையை முடித்தாப்போலே "மதக்களிறைந்தினையும் சேரி திரியாமல் செந்நிறீஇ" என்கிற பொய்கையார் பாசுரத்தின்படியே மதகளிறுகிய இந்திரியத்தின் துஷ்டத்தன்மையைத் தொலைத்தவர். கண்ணன் மாலாகாரர் திருமாளிகைக் செழுந்தருளி அவர் தந்த பூவைப்பெற்று உகந்ததுபோல நம் ஆசிரியர் *அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரிய நிக்ரஹ:, ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமாபுஷ்பம் விசேஷத:. ஜ்ஞாநம் புஷ்பம் தப:புஷ்பம் த்யாநம் புஷ்பம் ததைவச, ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத்* என்னப்பட்ட எண்பகர் பூவையும் சிஷ்யர்கள்பக்கலிலே செழித்து வளரக் காணப்பெற்றுக் களித்தமையறிக

16. கண்ணபிரான் கம்ஸ சிசுபால கௌரவ ப்ரப்ருதிகளை முடித்துப் பஞ்ச பாண்டவாதிகளை வாழ்வித்ததுபோல நம் பரமாசார்யர் *தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ்சடையோன் சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும் நான்மறையும் நிற்கக் குறும்பு செய்நீசரும் மாண்டனரென்னும்படியாக *நாட்டிய நீசச் சமயங்களை மாள்வித்து அர்த்த பஞ்சகம் முதலிய விசேஷார்த்தங்களை எங்கும் விளங்கச் செய்தனர். இங்ஙனே மற்றும் பலவுங் காண்க.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

# சென்னை ஸத்க்ரந்த ப்ரகாசந சபையின் அறிக்கை

இந்த ஸபை ஆரம்பித்து ஒரு வருஷமாகிறது. ஸபையின் நோக்கப்படி காரியங்கள் ஒழுங்காக நடந்துவருகின்றன. தமிழ் லிபியிலும், தெலுங்கு லிபியிலும் ஒரு வருஷத்திற்கு வெளிவரவேண்டிய புத்தகங்கள் பூர்த்தியாக வெளிவந்துவிட்டன. தமிழ் வெளியீடுகளைப்பற்றி மாத்திரம் இங்குத் தெரிவிக்கப்படுகிறது.

குருபரம்பரா ப்ரபாவமென்கிற பூர்வாசார்ய வைபவம்.
பக்கம் 156. விலை ரூ. 1—4—0

ஆசார்யஹ்ருதய ஸாரம்.
இது இரண்டு பகுதியாக வெளியிடப்பட்டது. பெரிய ஸைஸ் பக்கம் 228. விலை ரூ. 4-0-0.

திவ்ய ப்ரபந்தஸாரத் திரட்டு-
சிறிய ஸைஜ். பக்கம் 80. விலை ரூ. 1—0—0,

பன்னிரு திங்களநுபவம்-
பெரிய ஸைஜ். பக்கம் 132. விலை ரூ. 2—0—0

நித்தியாநுஸந்தானம் மூலம்.
சிறிய ஸைஜ். பக்கம் 120. விலை ரூ 1—0—0.

நித்தியாநுஸந்தானம் உரை.
பெரிய ஸைஜ். பக்கம் 176. விலை ரூ. 2—0—0

## கத்யத்ரய வியாக்யானம்

எம்பெருமானார் அருளிச்செய்த "கத்யத்ரயத்திற்கு" மிகவும் எளிய நடையில் தெளிவானவுரை வெளிவந்துவிட்டது. இப்பத்திரிகை யாசிரியரால் எழுதப்பட்ட உரை. தேவநாகரி, க்ரந்தம், தமிழ் மூன்று லிபியிலும் மூலமுள்ளது. விலை ரூ. 1—2—0.

http://acharya.org

*ஸ்ரீரஸ்து*

**பத்மாவதீஸமேத ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:**

**அலர்மேல்மங்கையுறைமார்பனடியிணை வாழி.**

## 2. திருவேங்கடமுடையான் விஷயமான ஸ்தோத்ரம்

மணவாளமாமுனிகள் திவ்ய தேச யாத்திரையாக எழுந்தருளுமளவில் திருமலைக்கெழுந்தருளின காலத்துத் தமது திருவடிகளில் ஒருவரான அண்ணனுக்கு நியமிக்க, அவர் பணித்த ஸ்துதி.

# * ஸ்ரீ வேங்கடேச ஸ்தோத்ரம் *

*[திருமலையில் அன்றுதொட்டு நாடோறும் ஸுப்ரபாத காலத்தில் நியமேந அநுஸந்திக்கப்பட்டு வருவது.]*

## ॥ श्रीवेङ्कटेशस्तोत्रम् ॥

**कमलाकुचचूचुककुङ्कुमतो नियतारुणितातुलनीलतनो ।**
**कमलायतलोचन लोकपते विजयी भव वेङ्कटशैलपते ॥ १ ॥**

கமலாகுசசூசுககுங்குமதோ நியதாருணிதாதுலநீலதநோ ।
கமலாயதலோசந லோகபதே விஜயீ பவ வேங்கடசைலபதே ! (1)

| | |
|---|---|
| *கமலா குச சூசுக குங்குமத:* | *பெரிய பிராட்டியாருடைய திருமுலைத் தடங்களிலணிந்த குங்குமக்குழம்பினால்* |
| *நியத அருணித அதுல நீல தநோ* | *எப்போதும் சிவப்புப் பெற்று ஒப்பற்று விளங்காநின்ற நீலமேனியையுடையாய்!* |
| *கமல ஆயத லோசந!* | *அரவிந்தம் போன்று நீண்ட கண்ணினாய்!* |
| *லோகபதே* | *உலகங்கட்கெல்லாமிறைவனே!* |
| *வேங்கட சைல பதே!* | *திருவேங்கடமலைக்கிறைவனே!* |
| *விஜயீ பவ* | *நித்யஸ்ரீர் நித்ய மங்களமாக விளங்குவாயாக.* |



http://acharya.org

* * * திருவேங்கடமுடையானுக்கு மங்களாசாஸனம் செய்வது இந்த ச்லோகம். இதில் பூர்வார்த்தம் முழுவதும் ஒரு ஸம்போதநம். ✻ அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பா! ✻ என்ற அருளிச்செயலின் பொருளைப் பர்யாயமாக அநுஸந்தித்தபடி. பெரிய பிராட்டியாருடைய திருமுலைத் தடங்களிலே மங்களாலங்காரமாகக் குங்குமச்சாறு அணிந்திருப்பதுண்டே; அது நித்ய ஸம்ச்லேஷத்தினால் உறைந்துறைந்து எம்பெருமானுடைய நீலமேனியானது செந்நிறமாயிற்றென்கிற இந்த அதிசயோக்தியினால் திவ்ய தம்பதிகளின் இணைபிரியாமை தெரிவிக்கப்பட்டதாகும். "இவளோடே கூடியே வஸ்துவினுடைய உண்மை; ஈச்வரஸ்வாதந்த்ர்யத்தையும் சேதநனுடைய அபராதத்தையும் கண்டு அகலமாட்டாள்" என்ற முமுக்ஷுப்படி ஸ்ரீஸூக்தி இங்கே அநுஸந்தேயம். ஞானம் ஆனந்தம் முதலியவை எப்படி பகவானுக்கு ஸ்வரூபநிரூபகங்களோ அப்படி ஸ்ரீபதித்வமும் நிரூபகமாகையாலே இவளோடே கூடியே ஈச்வர வஸ்துவின் ஸத்தையாம். சேதநர்களின் அபராதங்களைக் கணக்கிட்டு · தண்டிக்க வல்லவனான ஈச்வரனுடைய ஸ்வாதந்திரியத்தையும் சேதநர் செய்யும் குற்றங்களின் அளவின்மையையுங் கண்டு 'ஐயோ! என்னாகுமோ!' என்கிற பயத்தினால் ஈச்வரனைவிட்டு ஒரு நொடிப்பொழுதும் அகலமாட்டாளென்க.

சூசுகம்— "**चूचुकं तु कुचाग्रं स्यात्** — சூசுகம் து குசாக்ரம் ஸ்யாத்" என்ற அமர கோசத்தின்படி ஸ்தநத்தின் அக்ரபாகம் சூசுகமெனப்படும். கரிகலப, கர்ணவதம்ஸாதி ப்ரயோகம் போலே இங்கு குச சப்தப்ரயோகம் மிகையாகாது. "கொவ்வைவாய் மகளிர் கொங்கைக் குங்குமங் கழுவிப்போந்த தெய்வநீர் கமழுநாங்கூர்" என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தினாலும் மாதர்கள் முலைத்தடங்களில் குங்குமச் சேறு அணிதல் தெரியவரும். [கமலாயத லோசந!] கமலம் போன்றவையாயும் ஆயதங்களாயுமிருக்கின்ற திருக்கண்களையுடையாய்! என்கை. கமலம் ஆயதத்வத்திற்கு உவமையன்றென்க. .... .... (1)

**सचतुर्मुखषण्मुखपञ्चमुखप्रमुखाखिलदैवतमौलिमणे ।**
**शरणागतवत्सल सारनिधे परिपालय मां वृषशैलपते ॥ २ ॥**

ஸசதுர்முகஷண்முகபஞ்சமுகப்ரமுகாகிலதைவதமௌலிமணே!
சரணாகதவத்ஸல! ஸாரநிதே! பரிபாலய மாம் வ்ருஷசைலபதே! (2)

| | | | |
|---|---|---|---|
| ஸசதுர்முக ஷண்முக பஞ்சமுக ப்ரமுக அகில தைவத மௌலி மணே! | நான்முகக் கடவுளோடு கூடிய ஸுப்ரம்மண்யன் சிவன் முதலான ஸகல தெய்வங்களுக்கும் சிரோ பூஷணமாக விளங்குமவனே! | ஸாரநிதே | ... சிறந்த நிதி போன்றவனே! |
| சரணாகத வத்ஸல | அடிபணிந்தவர்கள் பக்கலிலே வாத்ஸல்யமுடையவனே! | வ்ருஷசைல பதே | வ்ருஷபகிரி யென்னப்படுகிற திருமலைக்கு இறைவனே! |
| | | மாம் பரிபாலய | அடியேனைக் காத்தருள வேணும். |

* * * "யாம் கடவுளென்றிருக்குமெவ்வுலகிற் கடவுளர்க்கும் ஆங்கடவுள் நீ" என்றபடி தெய்வமென்று பேர் சுமக்கின்ற ஸகல தெய்வங்களுக்கும் தலையான தெய்வமே! சரணாகதர் பக்கலில் வாத்ஸல்யமே வடிவெடுத்தவனே! சிறந்த நிதி போன்றவனே! திருமலையப்பனே! அடியேனுக்கு அநிஷ்டநிவ்ருத்திபூர்வகமான இஷ்டப்ராப்தியைச் செய்தருளவேணுமென்றபடி.

http://acharya.org

ஷண்முக பஞ்சமுகர்களை சதுர்முகனோடு கூடியிருப்பவர்களாகச் சொன்னது ஸமுச்சய தாத்பர்யகம்; பிரமனும் கந்தனும் சிவனுமாகிய தெய்வங்களுக்குத் தலைவனே! என்றவாறு. "நோலாதாற்றேனுனபாதங் காணவென்று நுண்ணுணர்வின் நீலார்கண்டத்தம்மானும் நிறை நான்முகனுமிந்திரனும் சேலேய் கண்ணார் பலர் சூழவிரும்பும் திருவேங்கடத்தானே!" என்ற திருவாய்மொழிப் பாசுரம் பூர்வார்த்தத்திற்குச் சேர அநுஸந்தேயம்.

❋ அகலகில்லேனிறையுமென்கிற பாசுரத்தில் ❋ நிகரில் புகழாய் ❋ என்றவிடத்திற்கு வியாக்கியானஞ் செய்தருளின பூருவாசார்யர்கள் வாத்ஸல்ய குணத்தையே நிகரில் புகழாக நிரூபித்தருளினபடியாலே இங்கு விசேஷித்து ❋ சரணாகதவத்ஸல ❋ என்றது. உடனே ஸாரநிதே! என்றது ஸாரமான குணங்களுக்கெல்லாம் கொள்கலமானவனே! என்றபடி. முந்தின ச்லோகத்தில் புருஷகாரபூதையான பிராட்டியின் ப்ரஸ்தாவமிருக்கையாலே, அந்த புருஷகாரபலத்தாலே எம்பெருமானுடைய ஸ்வாதந்திரியமானது தலைமடிந்து தலையெடுக்கும் குணங்களான வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகளைச் சொல்லவேண்டுவது அவசியம். குணங்கள் ஆச்ரயண ஸௌகர்யாபாதகங்களென்றும் ஆச்ரித கார்யாபாதகங்களென்றும் இரண்டு வகுப்பாயிருக்கும். அஞ்சாமல் கூசாமல் நாம் ஆச்ரயிக்கும்படி அநுகூலப்படுத்துகின்ற குணங்கள் ஆச்ரயண ஸௌகர்யாபாதகங்களெனப்படும். ஆச்ரயித்த பிறகு காரியம் தலைக்கட்டும்படி செய்யுங் குணங்கள் ஆச்ரித கார்யாபாதகங்களெனப்படும். வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌசீல்யம், ஸௌலப்யம் என்கிற குணங்கள் ஆச்ரயண ஸௌகர்யாபாதகங்களாம். ஜ்ஞாந சக்திகள் ஆச்ரித கார்யாபாதகங்களாம். ஆச்ரயிக்கவொருப்படுகின்ற இச்சேதநன் தன் தோஷங்களைப் பார்த்து அஞ்சும்போது தோஷபோக்யத்வரூபமான வாத்ஸல்யத்தை நினைத்து அந்த அச்சம் தீரலாம். இந்த வாத்ஸல்யமே தலையான குணமென்பதை ஸ்வாமி யெம்பெருமானாரும் கத்யத்திலே விளங்கக் காட்டியருளினர். எங்ஙனேயென்னில்; ❋ அபார காருண்ய-ஸௌசீல்ய-வாத்ஸல்ய-ஔதார்ய-ஐச்வர்ய-ஸௌந்தர்ய மஹோததே! ❋ என்று வாத்ஸல்யமுமுட்பட எடுத்தெடுத்தியிருக்கச் செய்தேயும் மீளவும் ❋ ஆச்ரிதவாத்ஸல்யைக ஜலதே! ❋ என்று தனிப்படவுமருளிச் செய்தாரிறே.

[ஸாரநிதே!] "**सारो बले स्थिरांशे च न्याय्ये क्लीबं वरे त्रिषु** — ஸாரோ பலே ஸ்திராம்சே ச ந்யாய்யே க்லீபம் வரே த்ரிஷு" என்ற அமரகோசத்தின்படி அங்குச் சொன்ன பொருள்களுடங்கலும் இங்குக் கொள்ளத் தகும். ஸாரமான குணங்களுக் கெல்லாம் நிதிபோன்றவனே! சிறந்த நிதி போன்றவனே! என்று இரண்டு வகையாகவும் பொருள் கொள்ளலாம். எம்பெருமானை ஆழ்வார்கள் நிதியாகப் பேசியநுபவித்தார்கள். "நிதியே திருநீர்மலை நித்திலத் தொத்தே!" "நிதியினைப் பவளத்தூணை" "வைத்தமாநிதியாம் மதுசூதனன்" என்றிங்ஙனே பல பாசுரங்கள் காண்க. ❋ அந்தர்ஹிதோ நிதிரஸி த்வம் அசேஷபும்ஸாம் லப்யோஸி புண்ய புருஷைரிதரைர் துராப: ❋ என்று ஆழ்வானும் ❋ மாயாநிகூடமநபாயமஹார்நிதிம் த்வாம் ❋ என்று தேசிகனும் பணித்தார்கள். நிதியானது ஒருவர் கண்ணுக்கும் புலப்படாதபடி மறைந்து கிடக்கும்; எம்பெருமானும் ❋ இவற்றுளெங்கும் மறைந்துறைவாய் ❋ கரந்தெங்கும் பரந்துளன் ❋ என்பவை முதலான பாசுரங்களின் படியும் ❋ கண்காணநிற்கில் ஆணையிட்டு விலக்குவர்களென்று கண்ணுக்குத் தோற்றாதபடி நின்று ❋ என்கிற ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்தியின் படியும் கட்கிலியாயிருப்பன். மறைந்து கிடக்கும் நிதியானது சில பாக்ய சாலிகளுக்கே புலப்படுமா போலே எம்பெருமானும் ❋ யானே தவஞ்செய்தேன் ❋ ❋ கோராமாதவம் செய்தனன் கொலறியேன் ❋ என்னும்படியான சில பாக்யசாலிகளுக்கே புலப்பட்டான். ஒருவகையான ஸித்தாஞ்ஜனமணிந்து கொண்டு பார்ப்பவர்களுக்கே நிதி தோன்றுமாபோலே எம்பெருமானும் ❋ மநஸி விலஸதாக்ஷ்ணா பக்திஸித்தாஞ்ஜநேந ❋ என்று பட்டரும் ❋ ஸித்தாஞ்ஜநேந பவதைவ விபூஷிதாக்ஷா: ❋ என்று தேசிகனும் பணித்த படியே பக்தியாகிற ஸித்தாஞ்ஜனமணிந்த திவ்ய சக்ஷுஸ்ஸைப் பெற்றவர்களுக்கே தோன்றுவன். நிதியானது எடுத்தெடுத்தெவ்வளவு அநுபவிக்கப்பட்டாலும் கொள்ளமாளாததாய் அக்ஷய்யமாயிருக்குமா போலே எம்பெருமானும் எனையூழிகாலம் அநுபவிக்கப்பட்டாலும்

http://acharya.org

குறைவுபடாதே மேன்மேலும் பெருகிச் செல்வன். ❋ உத்காட்ய யோககலயா ❋ என்கிற குவலயாநந்த மங்களச்லோகம் இங்கு நினைக்கத்தகும். ... ... (2)

अतिवेलतया तव दुर्विषहैरनुवेलकृतैरपराधशतैः ।
भरितं त्वरितं वृषशैलपते परया कृपया परिपाहि हरे ॥ ३ ॥

அதிவேலதயா தவ துர்விஷஹை: அநுவேலக்ருதைரபராதசதை: ,
பரிதம் த்வரிதம் வ்ருஷசைலபதே! பரயா க்ருபயா பரிபாஹி ஹரே (3)

| | | | |
|---|---|---|---|
| வ்ருஷசைல பதே ஹரே! | திருமலையப்பனே! | அபராத சதை: | நூற்றுக்கணக்கான குற்றங்களினால் |
| அதிவேலதயா | கங்கு கரை யில்லாமையினாலே | பரிதம் (மாம்) | நிறைந்திருக்கின்ற அடியேனை |
| தவ துர்விஷஹை: | தேவரீருக்கும் ஸஹிக்கக் கூடாதவைகளாயும் | பரயா க்ருபயா | ... பரமக்ருபையினாலே |
| அநுவேல க்ருதை: | க்ஷணந்தோறும் செய்யப் பட்டவையாயுமிருக்கின்ற | த்வரிதம் பரிபாஹி | விரைந்து காத்தருள வேணும். |

❋ ❋ ❋ எம்பெருமான் ஸர்வாபராதஸஹிஷ்ணுவானாலும் அவன்றனக்கும் அஸஹ்யமாம்படி க்ஷணந்தோறும் எண்ணிறந்த பாபங்களைச் செய்துபோராநின்றோமிறே. நோயாளியானவன் மருத்துவன்பக்கலிலே தனது உண்மையான அபத்யங்களைச் சொல்லிக்கொண்டு புகுந்து பரிஹாரம் பெறுமா போலே பாபிகளான நாமும் பகவத்ஸந்நிதியிலே உள்ளவாறு நமது பாபபூயிஷ்டதையைச் சொல்லிக்கொண்டு புகவே பரிஹாரம் பெறலாமிறே. அஸ்மதாதிகளின் அநுஸந்தானத்திற்காகவிறே பூருவர்கள் இங்ஙனே ச்லோகங்களும் பாசுரங்களும் பணித்து வைத்தது.

வேலாம் அதிக்ராந்தம் அதிவேலம்; வேலையாவது கரை; கரை கடந்திருப்பதனாலேயென்றபடி- தவ என்பதனோடே அபிசப்தமும் கூட்டிக்கொள்ளத்தக்கது; ஸர்வஸஹிஷ்ணுவென்று விருதுபடைத்த தேவரீர் தமக்கும் ஸஹிக்கவொண்ணாதபடியன்றோ எம்முடைய பாவங்கள் கூடுபூரித்துக் கிடக்கின்றனவென்கை. அநுவேலமென்றது க்ஷணந்தோறுமென்றபடி. "வேலா காலமர்யாதயோரபி" என்பது அமரகோசம். .... .... (3)

अधिवेङ्कटशैलमुदारमतेः जनताभिमताधिकदानरतात् ।
परदेवतया गदितान्निगमैः कमलादयितान्न परं कलये ॥ ४ ॥

அதிவேங்கடசைலமுதாரமதே: ஜநதாபிமதாதிகதாநரதாத்,
பரதேவதயா கதிதாந்நிகமை: கமலாதயிதாந்ந பரம் கலயே (4)

| | | | |
|---|---|---|---|
| அதிவேங்கடசைலம் | திருமலையில் (எழுந்தருளியிருக்கிற) | ஜநதா அபிமத அதிக தாந ரதாத் | அவரவர்கள் விரும்புவதிற்காட்டிலும் அதிகமாகவே அளித்தருளவல்லவரும் |
| உதாரமதே: | ஔதார்யம் மிகுந்த திருவுள்ளமுடையவரும் | | |

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| நிகமை: பரதேவதயா கதிதாத்கமலாதயிதாத் | வேதங்களினால் பரதெய்வமாக ஓதப்பட்டவரும் லக்ஷ்மீபதியுமான எம்பெருமானிற் காட்டிலும் | பரம் | ... வேருனதொரு வஸ்துவை |
| | | ந கலயே | ... எண்ணுகின்றிலேன். |

* * * பரமோதாரனைப் வேதாந்தவேத்ய பரதேவதையான திருமாலே திருமலையில் ஸேவை ஸாதித்தருளாநின்றபடியால் * மற்றோர் தெய்வம் நான் மதிக்கிலேனென்கிறார். அதிவேங்கடசைலம்—அவ்யயீபாவஸமாஸம். * ஹரௌ - அதிஹரி * என்னுமா போலே. [உதாரமதே:] ஔதார்யத்தை எம்பெருமானிடத்தில் ஸாக்ஷாத்தாகச் சொல்லாமல் மதியிலேயிட்டுச் சொன்னது— அடியார்க்கு எவ்வளவு கொடுத்தாலும் ஒன்றுங்கொடுக்கப் பெற்றிலோமென்றும் இன்னமுங் கொடுக்கவேணுமென்றுமிருக்கிற ஹ்ருதயவைசால்யத்தைச் சொன்னபடி. * ஒன்றுண்டு செங்கண்மால் யானுரைப்பது, உன்னடியார்க்கு என் செய்வனென்றேயிருத்தி நீ * என்ற பெரிய திருவந்தாதிப்பாசுரம் இங்கு அநுஸந்திக்கத்தகும். ஜநதாபிமத தாநரதாத் என்னுதே "அதிகதாநரதாத்" என்றது * அர்த்திதார்த்தபரிதாந தீக்ஷிதரான தேவப்பெருமாளிற் காட்டில் வாசி சொன்னபடி. நிகமை: என்றது வேதாந்தங்களென்ற விவக்ஷையாலே. .... ... ... ... (4)

कलवेणुरवावशगोपवधूशतकोटिवृतात् स्मरकोटिसमात् ।
प्रतिवल्लवि चाभिमतात्सुकृतात् वसुदेवसुतान्न परं कलये ॥ ५ ॥

கலவேணுரவாவசகோபவதூசதகோடிவ்ருதாத் ஸ்மரகோடிஸமாத்;
ப்ரதிவல்லவி சாபிமதாத் ஸுக்ருதாத் வஸுதேவஸுதாந்ந பரம் கலயே. (5)

| | | | |
|---|---|---|---|
| கல வேணுரவ அவச கோபவதூ சதகோடி வ்ருதாத் | அதிமதுரமான வேணு நாதத்திற்குப் பரவசப்பட்ட ஆய்ச்சிகளின் திரளால் சூழப்பட்டவனும் | ஸுக்ருதாத் | ஸாக்ஷாத் தர்மஸ்வரூபியுமான |
| ஸ்மர கோடி ஸமாத் | கோடிக்கணக்கான மன்மதர்களையொத்தவனும் | வஸுதேவ ஸுதாத் | ... வாஸுதேவனிற்காட்டிலும் |
| ப்ரதிவல்லவி ச அபிமதாத் | ஒவ்வொரு ஆய்ச்சியும் நமக்கே கணவனென்று அபிமானித்திருக்கப்பெற்றவனும் | பரம் ந கலயே | வேறொருவரை எண்ணுகின்றிலேன். |

* * * இந்த ச்லோகம் முதலாக நான்கு ச்லோகங்களினால் திருவேங்கடமுடையானைக் கண்ணபிரானாகவும் இராமபிரானாகவும் கொண்டு ஏத்துகிறார். இந்த ச்லோகம் கண்ணபிரானை வைத்துத் துதிக்கிறது. * பொங்கு புள்ளினைவாய் பிளந்த புராணர்தம்மிடம்—திருவேங்கடம் * என்றும், * கன்றிமாரிபொழிந்திடக் கடிதாநிரைக்கு இடர் நீக்குவான் சென்று குன்றமெடுத்தவன் திருவேங்கடம் * என்றும் ஆழ்வார்கள் காட்டினவழியே யிது.

* தூவலம் புரியுடைய திருமால் தூயவாயிற்குழலோசை வழியே கோவலர் சிறுமியரிளங்கொங்கை குதுகலிப்ப உடலுளவிழ்ந்து எங்குங் காவலுங் கடந்து கயிறுமாலையாகி வந்து கவிழ்ந்து நின்றனரே * என்னும்படியே திருக்குழலோசையில் பரவசப்பட்ட கோபிகளோடு குரவைகோத்த குழகன் என்கிறது முதல் விசேஷணம். * ஸாக்ஷாந்மந்மதமந்மத: * என்னும்

http://acharya.org

* * * தயரதற்கு மகன் தன்னையன்றிமற்றிலேன் தஞ்சமாகவே * என்றும் * கற்பார் ராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ * என்றும் * சிலையினாலிலங்கை செற்ற தேவனே தேவனாவான் * என்றுமுள்ள பாசுரங்களையடியொற்றி அருளிச்செய்ததாமிது. .... (8)

विना वेङ्कटेशं न नाथो न नाथः सदा वेङ्कटेशं स्मरामि स्मरामि ।
हरे वेंकटेश प्रसीद प्रसीद प्रियं वेंकटेश प्रयच्छ प्रयच्छ ॥ ९ ॥

விநா வேங்கடேசம் ந நாதோ ந நாத: ஸதா வேங்கடேசம் ஸ்மராமி ஸ்மராமி,
ஹரே வேங்கடேச ப்ரஸீத ப்ரஸீத ப்ரியம் வேங்கடேச ப்ரயச்ச ப்ரயச்ச. (9)

| | | | |
|---|---|---|---|
| வேங்கடேசம் விநா / நாத: ந, நாத: ந | திருவேங்கடமுடையானைத் தவிர்த்து வேறொரு நாத னில்லையென்பது ஸத்யம், | ஹரே வேங்கடேச! / ப்ரஸீத ப்ரஸீத | ஸகல தாபங்களையும் ஹரிக்கவல்ல அப்பனே! திருவுள்ளம் மிகவுமுகந் தருளவேணும்; |
| வேங்கடேசம் ஸதா / ஸ்மராமி ஸ்மராமி | திருவேங்கடமுடையானை அநவரதமும் நினைத்த படியேயிருக்கின்றேன்; | வேங்கடேச! ப்ரியம் / ப்ரயச்ச ப்ரயச்ச | திருவேங்கடத்தெம் பெரு மானே! நன்மையைப் பயந்தருளினபடியே யிருக்கவேணும். |

இதில் ஒவ்வொரு பாதத்திலுமுள்ள த்விருக்திகள் ஆதராதிசயத்தாலானவை. (9)

अहं दूरतस्ते पदाम्भोजयुग्मप्रणामेच्छयागत्य सेवां करोमि ।
सकृत्सेवया नित्यसेवाफलं त्वं प्रयच्छ प्रयच्छ प्रभो वेंकटेश ॥ १० ॥

அஹம் தூரதஸ் தே பதாம்போஜயுக்மப்ரணாமேச்சயாகத்ய ஸேவாம் கரோமி,
ஸக்ருத் ஸேவயா நித்யஸேவாபலம் த்வம் ப்ரயச்ச ப்ரயச்ச ப்ரபோ வேங்கடேச!. (10)

| | | | |
|---|---|---|---|
| வேங்கடேச ப்ரபோ! | திருவேங்கடத்தெம் பெருமானே! | ஸேவாம் கரோமி | (அத்திருவடிகளில்) ஸேவை செய்கின்றேன்; |
| அஹம் | ... அடியேன் | ஸக்ருத் ஸேவயா | ஏதோவொருகால் செய்யும் ஸேவையினால் |
| தே பதாம்போஜயுக்ம / ப்ரணாம இச்சயா | உன்னுடைய இணைத் தாமரையடிகளை வணங்கும் விருப்பத்தினால் | நித்ய ஸேவா பலம் | நித்யமும் ஸேவிப்பதனாலாகும் பலனை |
| தூரத: ஆகத்ய | தூரதேசத்திலிருந்து வந்து | த்வம் ப்ரயச்ச ப்ரயச்ச | நீ அவசியம் கொடுக்கவேணும். |

* * * தெழிகுரலருவித் திருவேங்கடத்து எழில்கொள் சோதியெந்தை தந்தை தந்தைக்கு— ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம் * என்கிற பாரிப்பு குறையற்றிருக்கச் செய்தேயும் திருமலையிலேயே நித்யவாஸம் பண்ணிக் கொண்டு நித்ய கைங்கரியம் செய்துகொண்டிருக்க இயலாமையினாலே கதாசித் ஸக்ருத் வந்து ஸேவிக்கின்றேன்; ஆனாலும் ஒழிவில் காலமெல்லாமுடனாய்மன்னி ஸேவிப்பதாகவே திருவுள்ளம்பற்றி உகந்தருளவேணுமென்கிறார். அநந்யப்ரயோஜநமாக ஸேவிக்குமதிகாரிகள்

http://acharya.org

*"நித்யஸேவாபலம் ப்ரயச்ச" என்று ஒரு பலனை விரும்பக்கூடுமோவென்னில்; அத்தலையில் திருவுள்ளவுகப்பேயாயிற்று இங்குப் பலனாகக் கருதப்படுவது. ❋ கதாஹமைகாந்திகநித்ய கிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாதஜீவித: ❋ என்ற ஆளவந்தார் ஸ்ரீஸூக்தியிலே ❋ ப்ரஹர்ஷயிஷ்யாமி ❋ என்ற உயிரான வாசகம் நினைக்கத்தக்கது. .... ....* 10

**वृषशैलाधिप एव दैवतं नः वृषभाद्रीश्वर एव दैवतं नः ।**
**फणिशैलाधिप एव दैवतं नः भगवान् वेंकट एव दैवतं नः ॥ ११ ॥**

வ்ருஷசைலாதிப ஏவ தைவதம் ந: வ்ருஷபாத்ரீச்வர ஏவ தைவதம் ந:,
பணிசைலாதிப ஏவ தைவதம் ந: பகவாந் வேங்கட ஏவ தைவதம் ந:. (11)

*வ்ருஷசைலமென்பதும் வ்ருஷபாத்ரியென்பதும் பணிசைலமென்பதும் திருவேங்கடமலைக்கே பர்யாயநாமங்களாதலால் எல்லாவற்றாலும் திருமலையப்பனே அடியேன் தொழும் தெய்வமென்றதாயிற்று. .... .... ... .... ....* 11

**श्रीश्रीनिवासः परदैवतं नः श्रीश्रीनिवासः परमं धनं नः ।**
**श्रीश्रीनिवासः कुलदैवतं नः श्रीश्रीनिवासः परमा गतिर्नः ॥ १२ ॥**

ஸ்ரீஸ்ரீநிவாஸ: பரதைவதம் ந: ஸ்ரீஸ்ரீநிவாஸ: பரமம் தநம் ந:,
ஸ்ரீஸ்ரீநிவாஸ: குலதைவதம் ந: ஸ்ரீஸ்ரீநிவாஸ: பரமா கதிர் ந:. (12)

*ஸ்ரீ ஸ்ரீநிவாஸனே நமக்குப் பரதேவதையும் பெருஞ்செல்வமும் குலதேவதையும் பரமகதியுமாவான் என்றாராயிற்று. .... .... ... ...* 12

**अज्ञानिना मया दोषानशेषान् विहितान् हरे ।**
**क्षमस्व त्वं क्षमस्व त्वं शेषशैलशिखामणे ॥ १३ ॥**

அஜ்ஞாநிநா மயா தோஷாந் அசேஷாந் விஹிதாந் ஹரே,
க்ஷமஸ்வ த்வம் க்ஷமஸ்வ த்வம் சேஷசைலசிகாமணே. (13)

*சேஷசைலமாகிற திருவேங்கடமலையுச்சியில் நீலமணி போல் விளங்குமெம்பெருமானே! அவிவேகியான அடியேன் செய்த குற்றங்களையெல்லாம் நிர்ஹேதுகக்ருபையினாலே க்ஷமித்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்தாராயிற்று. ... .... ...* 13

**ईशानां जगतोऽस्य वेङ्कटपतेः विष्णोः परां प्रेयसीं तद्वक्षस्स्थलनित्यवासरसिकां तत्क्षान्तिसंवर्धिनीम् ।**
**पद्मालंकृतपाणिपल्लवयुगां पद्मासनस्थां श्रियं वात्सल्यादिगुणोज्ज्वलां भगवतीं वन्दे जगन्मातरम् ॥१४॥**

ஈசாநாம் ஜகதோஸ்ய வேங்கடபதேர் விஷ்ணோ: பராம் ப்ரேயஸீம்
தத்வக்ஷஸ்ஸ்தலநித்யவாஸரஸிகாம் தத்க்ஷாந்திஸம்வர்த்திநீம்,
பத்மாலங்க்ருதபாணிபல்லவயுகாம் பத்மாஸநஸ்தாம் ச்ரியம்
வாத்ஸல்யாதிகுணோஜ்ஜ்வலாம் பகவதீம் வந்தே ஜகந்மாதரம். (14)



http://acharya.org

| | |
|---|---|
| அஸ்ய ஜகத: ஈசாநாம் | இவ்வுலகுக்கெல்லாம் ஈச்வரியாயும் |
| வேங்கடபதே: விஷ்ணோ: பராம் ப்ரேயஸீம் | திருமலையப்பனுக்கு ப்ராண வல்லபையாயும் |
| தத் வக்ஷஸ்ஸ்தல நித்யவாஸ ரஸிகாம் | அவனது திருமார்பிலேயே நித்யவாஸஞ் செய்வதில் விருப்பமுடையவளாயும் |
| தத் க்ஷாந்தி ஸம்வர்த்திநீம் | அப்பெருமானுடைய க்ஷமா குணத்தை வளரச்செய்ப வளாயும் |
| பத்ம அலங்க்ருத பாணி பல்லவ யுகாம் | தாமரைமலரினால் அலங்கரிக்கப்பட்டுப் பல்லவம் போன்ற இரண்டு திருக்கைகளையுடையவளாயும் |
| பத்ம ஆஸநஸ்தாம் | தாமரைத் தவிசில் வீற்றிருப்பவளாயும் |
| வாத்ஸல்ய ஆதி குண உஜ்ஜ்வலாம் | வாத்ஸல்யம் முதலிய குணங்களால் திகழாநின்றவளாயும் |
| பகவதீம் | ... பரம பூஜ்யையாயும் |
| ஜகத் மாதரம் | உலகுக்கெல்லாம் தாயாயுமிருக்கின்ற |
| ச்ரியம் | அலர்மேல்மங்கைப் பிராட்டியை |
| வந்தே | அடியேன் வணங்குகின்றேன். |

❋ ❋ ❋ ❋ அஸ்யேசாநோ ஜகதோ விஷ்ணுபத்நீ ❋ என்ற ச்ருதிச்சாயையிலே பணித்த தாயிற்று ப்ரதம பாதம். "அவன் மார்பைவிட்டுப் பிரியில் இவ்வக்ஷரம் விட்டுப் பிரிவது" என்கிற ஸ்ரீஸூக்திக்குச் சேர ❋ தத்வக்ஷஸ்ஸ்தலநித்யவாஸரஸிகாம் ❋ என்றது. "**अस्ति कर्मार्हफलदे पत्यौ कृत्यद्वयं श्रियः । निग्रहाद्वारणं काले संधुक्षणमनुग्रहे ॥** – அஸ்தி கர்மார்ஹபலதே பத்யௌ க்ருத்யத்வயம் ச்ரிய:, நிக்ரஹாத் வாரணம் காலே ஸந்துக்ஷணமநுக்ரஹே" என்கிற தேசிக ஸ்ரீஸூக்தியையுட்கொண்டு தத்க்ஷாந்திஸம்வர்த்திநீம் என்றது. "புருஷகாரபலத்தாலே ஸ்வாதந்த்ரியம் தலைசாய்ந்தால் தலையெடுக்கும் குணங்களைச் சொல்லுகிறது நாராயணபதம்" [முமுக்ஷுப்படி] என்றவிடத்து அர்த்த விசேஷங்கள் இங்கே அநுஸந்தேயம். [பத்மாலங்க்ருதேத்யாதி.] ❋ பத்மப்ரியே பத்மிநி பத்மஹஸ்தே ❋ இத்யாதி ஸ்ரீஸூக்தமிங்கே அநுஸந்தேயம். [வாத்ஸல்யாதிகுணோஜ்ஜ்வலாம்] ❋ ஸஹதர்மசரீம் சௌரேஸ் ஸம்மந்த்ரித ஜகத்திதாம், அநுக்ரஹமயீம் வந்தே நித்யமஜ்ஞாதநிக்ரஹாம் ❋ என்ற தேசிக ஸூக்தியை ஸ்மரிப்பது. ஆக இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த பிராட்டியைத் தொழுகின்றமை கூறி
ஸ்தோத்ரத்தைத் தலைக்கட்டினாராயிற்று. ... ... .... 14

பிரதிவாதி பயங்கரம் அண்ணன் அருளிச் செய்த வேகங்டேச ஸ்தோத்ரம் முற்றிற்று.

அலர்மேல்மங்கையுறைமார்பனடியிணை வாழி.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் இயற்றிய
ஸ்ரீ வேங்கடேச ஸ்தோத்ரவுரை முற்றிற்று.

http://acharya.org

ஸ்ரீ

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்

## தேவப்பெருமாள் விஷயமான ஸ்தோத்ரங்கள்.

திருக்கச்சி நம்பிகள் அருளிச்செய்த

# தேவராஜாஷ்டகம்

**தனியன்கள்**

**श्रीमत्काञ्चीमुनिं वन्दे कमलापतिनन्दनम् । वरदांघ्रिसदासङ्गरसायनपरायणम् ॥**

ஸ்ரீமத்காஞ்சீமுநிம் வந்தே கமலாபதிநந்தநம்,
வரதாங்க்ரிஸதாஸங்கரஸாயநபராயணம்.

*தேவப்பெருமாளுடைய திருவடிகளிலே இடைவிடாது அன்பு பூண்டிருத்தலாகிற ரஸாயந ஸேவையிலே ஊற்றமுடையவரும், கமலாபதியென்பவருடைய திருக்குமாரருமான திருக்கச்சிநம்பிகளைத் தொழுகின்றேனென்கை.*

*காஞ்சீமுநிம் என்றது காஞ்சீபூர்ண முநிம் என்றபடி. நம்பிகளின் திருத்தகப்பனருக்குக் கமலாபதி என்று திருநாமம் இருந்திருக்குமென்று இந்த ச்லோகத்தினல் ஊஹிக்கலாகிறது. "கமலாபதிம் நந்தயதீதி கமலாபதி நந்தந:" என்று வ்யுத்பத்திகொண்டு எம்பெருமானை உகப்பிக்குமவர் என்று பொருள் கொள்ளலாமாயினும் இதில் ஔசித்யமிருப்பதாகப் புலப்படவில்லை. பெரியார்வாய்க் கேட்டுணர்க.*

*நம்பிகள் திருவாலவட்டத் திருப்பணி செய்துகொண்டு தேவப்பெருமாளோடு இடைவிடாது வாழ்ந்தவராதலால் உத்தரார்த்தம் மிகப்பொருந்தும். ஆயுர்வேத ப்ரஸித்தமான ஒரு ஔஷத விசேஷத்திற்கு ரஸாயந மென்று பெயர். அதனைப்பருகினர்க்கு அப்ரதிமமான புஷ்டியுண்டாகுமென்பது ப்ரஸித்தம். நம்பிகளுக்குத் தேவப்பெருமாளுடைய திருவடி ஸேவையே ரஸாயந ஸேவா ஸ்தாநீயமாய் விலக்ஷணமான புஷ்டியைத் தந்ததாயிற்று.* .... .... (1)

**देवराजदयापात्रं श्रीकाञ्चीपूर्णमुत्तमम् । रामानुजमुनेर्मान्यं वन्देऽहं सज्जनाश्रयम् ॥**

தேவராஜதயாபாத்ரம் ஸ்ரீகாஞ்சீபூர்ணமுத்தமம்,
ராமாநுஜமுநேர் மாந்யம் வந்தேஹம் ஸஜ்ஜநாச்ரயம்.

*தேவப்பெருமாளுடைய திருவருளுக்குக் கொள்கலமானவரும், மிகச்சிறந்தவரும் எம்பெருமானர்க்குப் பூஜ்யரும், ஸத்துக்களுக்கு ஆச்ரயபூதருமான திருக்கச்சிநம்பிகளைத் தொழுகின்றேனென்கை.*

*திருக்கச்சி நம்பிகள் எம்பெருமானருடைய வேண்டுகோளுக்கிணங்கி, தேவப்பெருமாளிடமிருந்து * அஹமேவ பரம் தத்வ மித்யாதியாக ஆறுவார்த்தைகளைப் பெற்று உபகரித்தருளினது பற்றியும், மற்றுஞ் சில இதிஹாஸங்களையுட்கொண்டும் ராமாநுஜமுநேர்மாந்யம் என்றது.*

*இவ்விரண்டு சுலோகங்களும் பிள்ளைலோகஞ்சீயருடைய சிஷ்யர்களில் ஒருவரான 'இராமானுசப்பிள்ளை' என்பவர் பணித்த 'ஸ்ரீ காஞ்சீ பூர்ணசதகம்' என்கிற ஸ்துதியிலிருந்து எடுத்து அநுஸந்திக்கப்பட்டு வருவதாக விளங்குகிறது.*

**தனியன் உரை முற்றிற்று.**

http://acharya.org

ஸ்ரீ

திருக்கச்சி நம்பிகள் திருவாய்மலர்ந்தருளிய

# ஸ்ரீ தேவராஜாஷ்டகம்

**नमस्ते हस्तिशैलेश! श्रीमन्नम्बुजलोचन! । शरणं त्वां प्रपन्नोऽस्मि प्रणतार्तिहराच्युत! ॥ १ ॥**

நமஸ்தே ஹஸ்திசைலேச ஸ்ரீமந்! அம்புஜலோசந,
சரணம் த்வாம் ப்ரபந்நோஸ்மி ப்ரணதார்த்தி ஹராச்யுத. (1)

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய உரை

**श्रीकाञ्चीपूर्ण मुनिभिः प्रणीतां वरदस्तुतिम् । अण्णङ्करार्यदासोऽयं विवृणोति सतां मुदे ॥**

ஸ்ரீகாஞ்சீ பூர்ண முநிபி: ப்ரணீதாம் வரத ஸ்துதிம்,
அண்ணங்கரார்ய தஸோயம் விவ்ருணோதி ஸதாம் முதே. (1)

ஸ்ரீ ஹஸ்தகிரிநாதனே! பெருந்தேவி மணவாளனே! செந்தாமரைக் கண்ணனே! அடியார்களுடைய துயர்களைத் தீர்த்தருள்பவனே! ஆச்ரிதரை ஒருகாலும் நழுவவிடாதவனே! உனக்கு நமஸ்காரம்; உன்னைச் சரணம் புகுந்தவனாகின்றேனென்கை.

எம்பெருமானுக்குப் பரவ்யூஹவிபவ அந்தர்யாமி அர்ச்சாவதாரங்களென்று ஐந்து நிலைமைகள் உள்ளனவென்பது ப்ரஸித்தம்; அந்த ஐந்து நிலைமைகளையும் இந்த ச்லோகத்தில் அநுபவிக்கிற அழகு அறியத்தக்கது. இதிலுள்ள ஐந்து ஸம்போதனங்களும் அந்த பஞ்ச ப்ரகாரங்களை நோக்கியிருப்பனவாகும். எங்ஙனே யென்னில்; ஹஸ்திசைலேச! என்றது அர்ச்சாவதாரத்தை நோக்கிய தென்பது ஸ்பஷ்டம். ஸ்ரீமந்! என்பது "வைகுண்டே து பரே லோகே ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:, ஆஸ்தே" என்கிற பிரமாணப்ரஸித்தியின்படியே பரவாஸுதேவனை நோக்கியதாகும். அம்புஜலோசந! என்பது இந்நிலத்திலே அழகிய வடிவம் பூண்டு அவதரித்த ராமக்ருஷ்ணதிரூப விபவாவதாரத்தை நோக்கியதாகும். திருக்கண்ணழகைச் சொன்னது ஸர்வாங்க ஸௌந்தர்யத்தையும் சொன்னபடி. ப்ரணதார்த்திஹர! என்றது க்ஷீர ஸாகரநிலய வ்யூஹ நிலைமையை நோக்கியதாகும். இடர்ப்பட்டாருடைய கூக்குரல் கேட்டு அவர்களுடைய ஆர்த்தியைத் தீர்ப்பதற்காகவேயிறே பாற்கடல் யோகநித்திரை சிந்தை செய் திருக்கிறபடி. அச்யுத! என்பது அந்தர்யாமித்வத்தை நோக்கியதாகும்; ஓரிடத்தையும் நழுவ விடாமல் எங்கும் பரந்துளன் என்கிறபொருள் இங்கு விவக்ஷிதம்.

இவ்வைந்து விளிகளும் தேவப்பெருமானையே நோக்கியவை என்கிற நிர்வாஹத்திற்கு இந்த நிர்வாஹம் ப்ரதிகூலமன்று. ... .... .... .... (1)

**समस्तप्राणिसन्त्राणप्रवीण करुणोल्बण । विलसन्तु कटाक्षास्ते मय्यस्मिन् जगतां पते! ॥ २ ॥**

ஸமஸ்தப்ராணி ஸந்த்ராணப்ரவீண! கருணோல்பண!
விலஸந்து கடாக்ஷாஸ்தே மய்யஸ்மிந் ஜகதாம பதே. (2)

ஸகல சேதநர்களையும் காத்தருளவல்லவனே! அருள்மிகுந்தவனே! உலகங்கட்கெல்லாம் இறைவனே! இந்த அடியேனிடத்தில் உன்னுடைய கடாக்ஷங்கள் ப்ரகாசிக்கவேணும்.

முதல் ச்லோகத்தில் ஸ்ரீமந்! அம்புஜலோசந! என்ற இரண்டு விளிகளையும் விவரிப்பது போன்றுளது இந்த ச்லோகம். ஸ்ரீமானாகையாலே ஸமஸ்தப்ராணிகளையும் ரக்ஷித்தருளக் கடமைப்பட்டவன் என்று விவக்ஷித்துப் பூர்வார்த்தம் அருளிச்செய்தார். அம்புஜலோசநனாகை யாலே ❋ தாமரைப்பூப்போலே செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழித்தருளவேணுமென்று விவக்ஷித்து உத்தரார்த்தமருளிச்செய்தார்.

ப்ரவீண! என்று தனிப்பதமாகப் பிரிக்காதே பூர்வார்த்தம் முழுவதையும் ஒரே பதமாக்கி, 'ப்ரவீணமான கருணையால் மிக்கவனே' என்று உரைத்தனுமாம். .... .... (2)

http://acharya.org

निन्दिताचारकरणं निवृत्तं कृत्यकर्मणः । पापीयांसममर्यादं पाहि मां वरदप्रभो ॥ ३

நிந்திதாசாரகரணம் நிவ்ருத்தம் க்ருத்யகர்மண:,
பாபீயாம்ஸம் அமர்யாதம் பாஹி மாம் வரதப்ரபோ ! (3)

வரந்தரும் பெருமானே ! சாஸ்த்ர நிஷித்தங்களான செயல்களைச் செய்பவனும் சாஸ்த்ர விஹிதங்களான கருமங்களில் விலகியிருப்பவனும் பாபிஷ்டனும் எல்லை கடந்து வர்த்திப்பவனுமான அடியேனைக் காத்தருளவேணும்.

முதல் ச்லோகத்தில் ப்ரணதார்த்திஹர ! என்ற விளியை விவரிப்பது போன்றுளது இந்த ச்லோகம்.

* இதம் குரு இதம் மாகார்ஷீ : * [இதைச் செய் ; இதைச் செய்யாதே] என்று சாஸ்த்ரங்கள் விதி நிஷேதரூபங்களாயிறே யிருப்பது. விஹிதங்களைச் செய்தும் நிஷித்தங்களை விலக்கியும் போரவேண்டியிருக்க: விபரீதமாக நடந்து பாவங்கள் கூடுபூரித்துக் கிடக்கின்றவடியேனைக் காத்தருளி உன்னுடைய ப்ரணதார்த்தி ஹரத்வத்தை நிலை நிறுத்திக் கொள்ளவேணுமென்றதாயிற்று. ... .... ... (3)

இனி, மேல் ச்லோகங்களெல்லாம் அச்யுத ! என்னும் விளியை விவரிப்பனவாகும்.

संसारमरुकान्तारे दुर्व्याधिव्याघ्रभीषणे । विषयक्षुद्रगुल्माढ्ये तृषापादपशालिनि ॥ ४

पुत्रदारगृहक्षेत्रमृगतृष्णाम्बुपुष्कले । कृत्याकृत्यविवेकान्धं परिभ्रान्तमितस्ततः ॥ ५

अजस्रं जाततृष्णार्तम् अवसन्नाङ्गमक्षमम् । क्षीणशक्तिबलारोग्यं केवलं क्लेशसंश्रयम् ॥ ६

सन्तप्तं विविधैर्दुःखैर्दुर्वचैरेवमादिभिः । देवराज दयासिन्धो देवदेव जगत्पते ॥ ७

त्वदीक्षणसुधासिन्धुवीचिविक्षेपशीकरैः । कारुण्यमारुतानीतैः शीतलैरभिषिञ्च माम् ॥ ८

ஸம்ஸாரமருகாந்தாரே துர்வ்யாதிவ்யாக்ரபீஷணே.
விஷயக்ஷுத்ரகுல்மாட்யே த்ருஷாபாதபசாலிநி. (4)

புத்ரதாரக்ருஹ க்ஷேத்ர ம்ருகத்ருஷ்ணாம்பு புஷ்கலே.
க்ருத்யாக்ருத்ய விவேகாந்தம் பரிப்ராந்தமிதஸ் தத. (5)

அஜஸ்ரம் ஜாதத்ருஷ்ணார்த்தம் அவஸந்நாங்கமக்ஷமம்.
க்ஷீணசக்திபலாரோக்யம் கேவலம் க்லேசஸம்ச்ரயம். (6)

ஸம்தப்தம் விவிதைர் து:க்கை: துர்வசைரேவமாதிபி:.
தேவராஜ தயாஸிந்தோ ! தேவதேவ ! ஜகத்பதே ! (7)

த்வதீக்ஷண ஸுதாஸிந்து வீசி விக்ஷேபசீகரை:.
காருண்யமாருதாநீதை: சீதலைரபிஷிஞ்ச மாம். (8)

கருணைக்கடலான தேவராஜனே ! தேவாதி தேவனே ! உலகுக்கோர் முந்தைத் தாய் தந்தையே !, கொடிய நோய்களாகிற புலிகளினால் பயங்கரமாயும், சப்தாதி விஷயங்களாகிற சிறு புதர்கள் நிறைந்ததாயும், ஆசையாகிற மரங்கள் அடர்ந்ததாயும், மக்கள் மனைவியர் வீடு நிலம் ஆகிற கானல் நிரம்பினதாயுமிருக்கின்ற ஸம்ஸாரமாகிற கொடிய காட்டில், 'இன்னது செய்யத்தக்கது, இன்னது செய்யத் தகாதது' என்கிற விவேகமின்றிக்கே இங்குமங்கும் சுழன்றுழல்பவனாய், எப்போதும் விடாய்த்தவனாய், உடல் இளைத்தவனாய், அஸமர்த்தனாய், சக்தி பலம் ஆரோக்யம் ஆகிய இவை ஒன்றுமில்லாதவனாய், க்லேசங்களே மிகுந்திருக்கப் பெற்றவனாய், சொல்லமுடியாத இப்படிப்பட்ட பலவகைத் துன்பங்களினால் தாபமுற்றவனாயிருக்கின்ற அடியேனை, காருண்யமாகிற காற்றினால் கொண்டு தள்ளப்பட்டவையும் குளிர்ந்தவையுமான உன்னுடைய கடாக்ஷாம்ருத நதீப்ரவாஹத்திவலைகளினால் நனைத்தருளவேணுமென்கிறார்.

6

http://acharya.org

ஐந்து ச்லோகங்களும் சேர்ந்து ஏகாந்வயமாகிறபடியாலே குலகம் எனப்படும். ஸாம்ஸாரிக தாபங்கள் மிகுந்திருக்குமடியேனைக் கடாக்ஷாம்ருத வர்ஷத்தினால் குளிரச்செய்தருளவேணுமென்று பிரார்த்திக்கிறார்.

இவ்விருள் தருமாஞாலமே ஸம்ஸாரமெனப்படுகிறது. இதனை ஒரு கொடிய காடாக ரூபிக்கிறார். காட்டில் புலி முதலிய பயங்கர ஜந்துக்கள் இருக்கும்; ஸம்ஸார நிலத்தில் கொடிய வியாதிகளே அவையாகும். காட்டில், உள்ளேயிழுத்துக்கொள்ளச் சிறு புதர்கள் இருக்கும்; இங்கு சப்தாதி விஷயங்களே அவையாகும். காட்டில் பலவகைப்பட்ட மரங்களிருக்கும்; இங்குப் பலவகைப்பட்ட ஆசைகளே மரங்களாகும். காட்டில் வீணான ப்ரமத்தையுண்டாக்கவல்ல கானல் மிகுந்திருக்கும்; "தாயே தந்தையென்றும் தாரமே கிளை மக்களென்றும்" "தந்தை தாய் மக்களே சுற்றமென்றுற்றவர் பற்றிநின்ற பந்தமார் வாழ்க்கை" "கொண்ட பெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் பிறரும்" இத்யாதிப்படியேயுள்ள ஆபாஸ பந்துக்களே இங்குக் கானலாகக் கொள்க.

"ஸம்ஸார மருகாந்தாரே" என்று ஸம்ஸாரத்தை மருகாந்தாரமாகச் சொல்லியிருக்கும்போது "த்ருஷாபாதபசாலிநி" என்னக் கூடுமோ? மரம் செடி கொடி முதலானவை ஒன்றுமில்லாத பாலை நிலத்திற்கன்றோ மருகாந்தாரமென்று பெயர்—என்று சிலர் சங்கிப்பதுண்டு. இங்குப் பெரியோர் பணிக்கும் ஸமாதானமாவது—பாலை நிலத்தில் நிழல்தரும்படியான மரங்கள் இருக்க ப்ரஸக்தியில்லையாயினும் மொட்டை மரங்கள், மட்டு மரங்கள் என்று சொல்லக்கூடிய சில வ்ருக்ஷங்கள் விரளமாகவாவது இருக்கக்கூடுமாதலால் அவற்றைத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்ததாகக் கொள்ளலாமென்று.

தாபாதுரர்களின்மீது ஒரு பாட்டம் மழைபொழிந்தால் ஸகலதாபங்களும் தீர்ந்து குளிர்ச்சி உண்டாகுமாப்போல திருக்கச்சி நம்பிகள் தாமும் ஸாம்ஸாரிக தாபங்களெல்லாம் தணிந்து குளிர்ச்சி உண்டாகுமாறு தேவப்பெருமாளுடைய திருவருள் நோக்க மழை பொழிவை ப்ரார்த்தித்துத் தம்முடைய ஸ்துதியையும் தலைக் கட்டினாராயிற்று. ... (8)

திருக்கச்சிநம்பிகள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீரஸ்து.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்

விசதவாக் சிகாமணிகளான

மணவாள மாமுனிகள் அருளிச் செய்த

# ஸ்ரீ தேவராஜ மங்களம்

[பெருமாள் கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய உரையுடன் கூடியது]

தனியன்

यश्चक्रे देवराजस्य मङ्गलाशासनं मुदा । तं वन्दे रम्यजामातृमुनिं विशदवाग्वरम् ॥

யச் சக்ரே தேவராஜஸ்ய மங்களாசாஸநம் முதா,
தம் வந்தே ரம்யஜாமாத்ருமுநிம் விசதவாக்வரம்.

(கருத்து.) ஸ்ரீதேவராஜ மங்களாசாஸந க்ரந்தத்தைத் திருவுள்ள முகந்து அருளிச்செய்தருளின விசதவாக் சிகாமணிகளென்று புகழ்பெற்ற மணவாள மாமுனிகளை வணங்குகின்றேனென்கை. ... ... ... (*)

http://acharya.org

திவ்யதேச யாத்திரையடைவிலே மாமுனிகள் கச்சிநகர்க்கு எழுந்தருளிச் சில காலம் திருவெஃகாவில் எழுந்தருளியிருந்து ஸ்ரீ பாஷ்யப்ரவசநம் செய்தருளா நிற்கும்போது, சிஷ்ய வர்க்கங்களின் ப்ரார்த்தனைக்கிரங்கிப் பேரருளாளப்பெருமாள் விஷயமாக ம்ருதுமதுரமான இந்த ஸ்துதிரத்நத்தை அருளிச் செய்தருளினாரென்று ப்ரஸித்தமாயிருக்கும். . இதில் சில ச்லோகங்கள் யதீந்த்ரப்ரவண ப்ரபாவத்திலும் உபாத்தம். இந்தத் தனியன் அப்பிள்ளை யருளிச் செய்ததாக ஏடுகளிற் காண்கிறது.

## க்ரந்தாரம்பம்.

मङ्गलं वेधसो वेदिमेदिनीगृहमेधिने । वरदाय दयाधाम्ने धीरोदाराय मङ्गलम् ॥ १

**மங்களம் வேதஸோ வேதிமேதிநீக்ருஹமேதிநே,**
**வரதாய தயாதாம்நே தீரோதாராய மங்களம்.**

* * * தேவப்பெருமாள் நான்முகன் செய்த அச்வமேத யாகத்தில் உத்தரவேதியில் திருவவதரித்தருளினா ரென்று புராணங் கூறும். அதற்கிணங்க **வேதஸோ வேதிமேதிநீ க்ருஹ மேதிநே** என்றார். **வேதஸ:**—பிரமனுடைய, **வேதிமேதிநீ**—உத்தர வேதிஸ்தலத்தை, **க்ருஹ மேதிநே**—இருப்பிடமாகக் கொண்டவரான என்றபடி. **க்ருஹமேதிநே** என்பது பெருந்தேவி மணவாளன் என்பதையும் தோற்றுவிக்கும் "**கமலாக்ருஹமேதிநம்**" என்றார் தேசிகன். பேரருளாளன் என்கிற திருநாமத்தை **தயாதாம்நே** என்பதனால் காட்டியருளினார். அருளுக்கு இருப்பிடமான என்றபடி. **தீரோதாராய**—தைர்யமும் ஔதார்யமும் உடையவரென்கை. 1

वाजिमेधे वपाहोमे धातुरुत्तरवेदितः । उदिताय हुतादग्नेरुदाराङ्गाय मङ्गलम् । २

**வாஜிமேதே வபாஹோமே தாதுருத்தரவேதித:,**
**உதிதாய ஹுதாதக்நேருதாராங்காய மங்களம்.**

பிரமனுடைய அயமேத வேள்வியில் வபையையெடுத்து ஹோமம் பண்ணினவுடனே உத்தரவேதியில் நின்றும் ஹோமகுண்டத்திலிருந்து உதித்தருளினவரும் அழகிய திருமேனி யையுடையவருமான பேரருளாளப் பெருமாளுக்குப் பல்லாண்டு. (2)

यजमानं विधिं वीक्ष्य स्मयमानमुखश्रिये । दयमानदृशे तस्मै देवराजाय मङ्गलम् ॥ ३

**யஜமாநம் விதிம் வீக்ஷ்ய ஸ்மயமாநமுகச்ரியே,**
**தயமாநத்ருசே தஸ்மை தேவராஜாய மங்களம்.**

தம்மை ஸாக்ஷாத்கரிக்கும் பொருட்டு வேள்விசெய்த பிரமனை நோக்கிப் புன்முறுவல் செய்துகொண்டு அருள் நோக்கம் தந்தருளின தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு. (3)

वारिदश्यामवपुषे विराजत्पीतवाससे । वारणाचलवासाय वारिजाक्षाय मङ्गलम् ॥ ४

**வாரிதச்யாமவபுஷே விராஜத்பீதவாஸஸே,**
**வாரணாசலவாஸாய வாரிஜாக்ஷாய மங்களம்.**

* கருமுகில் போல்வதோர் மேனியையுடையவரும், பீதகவாடை திகழும் திருவரை யையுடையவரும், திருவத்திமாமலையைத் தன்னிடமாகக் கொண்டவரும் செந்தாமரைக் கண்ணருமான தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு. (4)

अद्यापि सर्वभूतानामभीष्टफलदायिने । प्रणतार्तिहरायास्तु प्रभवे मम मङ्गलम् ॥ ५

**அத்யாபி ஸர்வபூதாநாம் அபீஷ்டபலதாயிநே,**
**ப்ரணதார்த்திஹராயாஸ்து ப்ரபவே மம மங்களம்.**

நான்முகனுக்கு அபேக்ஷித ஸம்விதாநம் செய்தருளினது போலவே இன்றைக்கும் ஸகலப்ராணிவர்க்கங்களுக்கும் அபேக்ஷிதங்களான பலன்களை அருள் செய்பவரும், ஆச்ரிதர்

http://acharya.org

களின் அநிஷ்ட நிவ்ருத்திகளையும் செய்தருள்பவரும் எனக்குத் தலைவருமான தேவப் பெருமாளுக்குப் பல்லாண்டு. (5)

दिव्यावयवसौन्दर्यदिव्याभरणहेतये । दन्तावलगिरीशाय देवराजाय मङ्गलम् ॥ ६

திவ்யாவயவஸௌந்தர்யதிவ்யாபரணஹேதயே,
தந்தாவளகிரீசாய தேவராஜாய மங்களம்.

திவ்யமான அவயவ ஸௌந்தர்யத்தை யுடையவரும் திவ்யமான ஆயுதாபரணங்களை யுடையவரும் ஸ்ரீஹஸ்திகிரி நாதருமான தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு.—தந்தாவள மென்று யானைக்குப்பெயர். பூர்வார்த்தத்தை விசேஷணோபயபதகர்மதாரயனாகக் கொள்க.(6)

पुरुषाय पुराणाय पुण्यकोटिनिवासिने । पुष्पितोदारकल्पद्रुकमनीयाय मङ्गलम् ॥ ७

புருஷாய புராணாய புண்யகோடி நிவாஸிநே,
புஷ்பிதோதாரகல்பத்ருகமநீயாய மங்களம்.

அநாதி ஸித்தபுருஷரும், புண்யகோடி விமானத்தில் எழுந்தருளியிருப்பவரும், பூத்து அழகிய கல்பவ்ருக்ஷம்போல் ஸ்ப்ருஹணீயருமான தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு.—ஒவ்வொரு திவ்ய தேசத்திலே விமாநத்திற்கு ஒவ்வொரு திருநாமமுண்டு. ஸ்ரீஹஸ்திகிரியிலுள்ளது புண்யகோடி விமாநமென்பதாம். வடமொழியில் த்ரும: என்பது போலவே த்ரு: என்பதும் வ்ருக்ஷவாசகம். கமநீய:—விரும்பத்தக்கவர். (7)

काञ्चनाचलशृङ्गाग्रकालमेघानुसारिणे । सुपर्णांसावतंसाय सुरराजाय मङ्गलम् ॥ ८

காஞ்சநாசலச்ருங்காக்ரகாளமேகாநுஸாரிணே,
ஸுபர்ணாம்ஸாவதம்ஸாய ஸுரராஜாய மங்களம்.

* காய்சினப்பறவையூர்ந்து பொன்மலையின் மீமிசைக் கார்முகில்போல் * என்கிற திருவாய்மொழிப் பாசுரத்தை யுட்கொண்டு அருளிச்செய்தது இந்த ச்லோகம். பொன்மயமானதொரு மலையினுச்சியிலே காளமேகம் திகழ்வதுபோல் பெரிய திருவடியின் திருத்தோளுக்கு அலங்காரமாகின்ற தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு. * அத்தியூரான் புள்ளையூர்வான் * என்று பூதத்தாழ்வார் அருளிச் செய்தபடி தேவப்பெருமாளுக்குப் பெரியதிருவடி ஸேவை * வையத்தெவரும் வணங்கவிருப்பதால் மற்ற வாஹநங்களைவிட்டுப் பெரியதிருவடி வாஹநத்தைப்பற்றி இதில் அருளிச்செய்யலாயிற்று. ஸுபர்ண:—கருடன். (8)

भोगापवर्गयोरेकं वाञ्छद्भ्यो ददते द्वयम् । श्रीमद्वरदराजाय महोदाराय मङ्गलम् ॥ ९

போகாபவர்க்கயோரேகம் வாஞ்சத்ப்யோ தததே த்வயம்,
ஸ்ரீமத்வரதராஜாய மஹோதாராய மங்களம்.

* இருள் தருமா ஞாலமாகிய இவ்வுலகத்தில் போகமென்றும் * நலமந்த மில்லதோர் நாடாகிய நித்யவிபூதியில் போகமென்றும் போகம் இருவகைப்படும். ஐஹிகத்தை விரும்புவார் சிலர்; ஆமுஷ்மிகத்தை விரும்புவார் சிலர்; இங்ஙனே ஒரொன்றை விரும்பினாலுங்கூட, தம்முடைய ஔதார்ய விசேஷத்தாலே * அவன் நாடு நகரமும் நன்குடன் காண நலனிடை யூர்தி பண்ணி, வீடும் பெறுத்தித் தன் மூவுலகுக்குந் தருமொரு நாயகமே * என்னும் கணக்கிலே இரண்டையுமளித்தருள்பவர் பேரருளாளப் பெருமாளென்கிறது. 9

मतङ्गजाद्रितुङ्गाग्रशृङ्गशृङ्गारवर्ष्मणे । महाकृपाय मद्रक्षादीक्षितायास्तु मङ्गलम् ॥ १०

மதங்கஜாத்ரிதுங்காக்ரச்ருங்கச்ருங்காரவர்ஷ்மணே,
மஹாக்ருபாய மத்ரக்ஷாதீக்ஷிதாயாஸ்து மங்களம்.

ஸ்ரீஹஸ்திகிரியின் மிகவுயர்ந்த உச்சிக்கு அலங்காரமான திருமேனியையுடையவரும் என்போல்வாரைக் காத்தருள்வதில் தீக்ஷைகொண்டவருமான பேரருளாளப் பெருமாளுக்குப்

http://acharya.org

பல்லாண்டு. * ச்ருங்காரோ கஜபூஷணம் * என்று மேதினீகோசம். யானையினுடைய பூஷணம் போலவே பூஷண ஸாமாந்யத்தையும் இச்சொல் சொல்லும். ஹஸ்திகிரியாதலால் கஜபூஷண மென்னும் பொருளையே இங்குக் கொள்ளவுமாம். வர்ஷ்ம—மேனி. (10)

श्रीकाञ्चीपूर्णमिश्रेण प्रीत्या सर्वाभिभाषिणे । अतीतार्चाव्यवस्थाय हस्त्यद्रीशाय मङ्गलम् ॥ ११

ஸ்ரீகாஞ்சீபூர்ணமிச்ரேண ப்ரீத்யா ஸர்வாபிபாஷிணே,
அதீதார்ச்சாவ்யவஸ்தாய ஹஸ்த்யத்ரீசாய மங்களம்.

அர்ச்சாவதார ஸமாதியைக்கடந்து திருக்கச்சிநம்பிகளோடு பரமப்ரீதியுடன் வார்த்தையாடி யருளின தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு. தேவப்பெருமாள் திருக்கச்சி நம்பிகள் மூலமாக உடையவர்க்கு ஆறு வார்த்தை யருளிச் செய்தது ப்ரஸித்தம் அவ்வளவு மாத்திரமே யன்று; நம்பிகளோடு அநவரதமும் வார்த்தையாடினதுண்டு என்கிறது ஸர்வாபி பாஷிணே என்பதனால். அதீத என்பது கர்த்தரிக்தமாகவுள்ளதுபோலவே கர்மணிக்தமாகவு முண்டாதலால் அதிலங்கிதமென்கிற பொருளிலே இங்கு ப்ரயுக்தம். அர்ச்சாவ்யவஸ்தை யாவது—அர்ச்சாவதாரத்தில் யாரோடும் பேசுவதில்லையென்று கொண்ட நியமம். (11)

अस्तु श्रीस्तनकस्तूरीवासनावासितोरसे । श्रीहस्तिगिरिनाथाय देवराजाय मङ्गलम् ॥ १२

அஸ்து ஸ்ரீஸ்தநகஸ்தூரீ வாஸநாவாஸிதோரஸே,
ஸ்ரீ ஹஸ்திகிரிநாதாய தேவராஜாய மங்களம்.

* கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து ஒருநாள் தங்குமேல் என்னாவி தங்குமென்றுரையீரே * என்று ஆண்டாளைப் போலே பாரிக்கவேண்டாமல் பெரிய பிராட்டியார் அநவரதமும் திருமார்போடே அணைந்திருக்கையாலே அவளுடைய திருமுலைத் தடத்தில் சாத்தின கஸ்தூரிக்காப்பின் நறுமணம் கமழாநின்ற திருமார்பையுடையவரான ஸ்ரீ ஹஸ்திகிரி நாதர்க்குப் பல்லாண்டு. (12)

मङ्गलाशासनपरैः मदाचार्यपुरोगमैः । सर्वैश्च पूर्वैराचार्यैः सत्कृतायास्तु मङ्गलम् ॥

மங்களாசாஸநபரை: மதாசார்யபுரோகமை:,
ஸர்வைச் ச பூர்வைராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம்.

பல்லாண்டு பாடுவதையே தொழிலாகக் கொண்ட அஸ்மதாசார்யர் முதலான ஸகல பூர்வாசார்யர்களாலும் போற்றப்பெற்ற பெருமானுக்குப் பல்லாண்டு. முன்னோர்களுடைய முறைமையைப் பின்பற்றியே அடியேனும் இந்த ஸ்துதியினால் பல்லாண்டு பாடினேனென்று அருளிச்செய்து தலைக்கட்டினாராயிற்று. (13)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ :

### தேவப் பெருமாள் விஷயமாக ஆளவந்தாருளிச்செய்த

# முக்தகம்.

यस्य प्रसादकलया बधिरःशृणोति पङ्गुःप्रधावति जवेन च वक्ति मूकः ।
अन्धः प्रपश्यति सुतं लभते च वन्ध्या तं देवमेव वरदं शरणं गतोऽस्मि ॥

யஸ்ய ப்ரஸாதகலயா பதிர: ச்ருணோதி பங்கு: ப்ரதாவதி ஜவேந ச வக்தி மூக:!
அந்த: ப்ரபச்யதி ஸுதம் லபதேச வந்த்யா தம் தேவமேவ வரதம் சரணம் கதோஸ்மி!!

http://acharya.org

(கருத்து) பேரருளாளப் பெருமாளுடைய அநுக்ரஹலேசத்தினால் செவிடனும் செவி பெறுவான், முடவனும் விரைந்தோடுவான்; ஊமையும் பேசவல்லவனாவான்; குருடனும் காணப் பெறுவான். மலடியும் மக்கள் பெறுவாள்; இப்படிப்பட்ட அநுக்ரஹம் செய்தருள வல்ல பேரருளாளப் பெருமாளைத் தஞ்சமாகப் பற்றுகின்றேனென்றவாறு.

ஆளவந்தார் பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளினகாலத்தில் யாதவப்ரகாசர் பக்கலிலே வேதாந்தம் அதிகரித்துக் கொண்டிருந்த உடையவர் விரைவில் ஸித்தாந்த ப்ரவர்த்தகராக ஆகவேணுமென்று தேவப் பெருமாளுடைய திருவடிகளிலே இந்த ச்லோகாநுஸந்தாநபூர்வகமாக ப்ரபத்தி பண்ணினாரென்றும், அப்போதாக அவதரித்த ச்லோகம் இது—என்றும் பெரியோர் பணிப்பர்கள்.

ஆளவந்தார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயர் அருளிச்செய்த

# நரஸிம்ஹாஷ்டகம்.

(தனியன்)

सुन्दरजामातृमुनेः प्रपद्ये चरणाम्बुजम् । संसारार्णवसंमग्नजन्तुसंतारपोतकम् ॥

ஸுந்தர ஜாமாத்ரு முநே: ப்ரபத்யே சரணாம்புஜம்,
ஸம்ஸாரார்ணவஸம்மக்ந ஜந்துஸந்தார போதகம்.

பிறவிக் கடலுள் நின்று துளங்கும் பிராணிகளைக் கரைமரஞ் சேர்ப்பதற்கரிய தோணி போன்றதான அழகிய மணவாளச்சீயருடைய திருவடித்தாமரைகளைத் தஞ்சமாகப் பற்றுகின்றேனென்றவாறு. .... ... ... ...

## அவதாரிகை.

திருவாய்மொழிக்குப் பன்னீராயிரப்படியுரை பணித்தவரும் தத்வதீப தீபப்ரகாசாதி க்ரந்தங்களைத் தந்தருளின வருமான வாதிகேஸரி ஜீயர் திவ்ய தேச யாத்திரையடைவிலே பெருமாள் கோயிலுக் கெழுந்தருளினபோது கரிகிரியின் கீழ்க் காட்சி தந்தருளாநின்ற அழகிய சிங்கர் விஷயமாக இந்த அஷ்டகஸ்துதியை யருளிச்செய்தா ரென்பர்.

திருவல்லிக்கேணிக் கெழுந்தருளினபோது அங்கெழுந்தருளியுள்ள தெள்ளிய சிங்கப் பெருமாள் விஷயமாகப் பணித்தது இது, என்பாருமுளர். செவிக்கினிய சந்தத்தில் அமைந்த இந்த ஸ்தோத்ரம் பக்தர்களுக்கு நித்யாநுஸந்தேயமாகக் கடவது.

ஸ்தோத்ராரம்பம்.

श्रीमदकलङ्कपरिपूर्णशशिकोटिश्रीधरमनोहरसटापटलकान्त ! ।
पालय कृपालय भवाम्बुधिनिमग्नं दैत्यवरकाल नरसिंह नरसिंह ॥१॥

ஸ்ரீமதகலங்க பரிபூர்ண சசி கோடி ஸ்ரீதர மநோஹர ஸடாபடல காந்த,
பாலய க்ருபாலய பவாம்புதிநிமக்நம் தைத்யவரகால நரஸிம்ஹ நரஸிம்ஹ. (1)

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமத் அகலங்க பரிபூர்ண சசி கோடி ஸ்ரீதர மனோஹர ஸடா படல காந்த ! | அழகியவாயும் களங்கமற்றவையாயுமுள்ள பலவாயிரம் பௌர்ணமீ சந்திரர்களின் சோபையைத் தாங்குகின்ற மனோஹரமான உளைமயிர்த் திரள்களினழகிய | தைத்ய வர கால | ஆசுரவாக்கங்களுக்கு யமன் போன்ற |
| | | நரஸிம்ஹ நரஸிம்ஹ | அழகிய சிங்கப்பெருமாளே ! |
| | | பவ அம்புதி நிமக்நம் (மாம்) பாலய | ஸம்ஸாரக் கடலில் வீழ்ந்த அடியேனை ரக்ஷித்தருள்வேணும். |
| க்ருபா ஆலய | கருணைக்கு இருப்பிடமாகிய, | | |

சிங்கத்தின் உளைமயிர்க் கற்றைக்கு ஸடாபடல மென்று பெயர். * அழகியான் தானே அரியுருவன்தானே * என்னும்படி யவதரித்த நரஸிம்ஹ மூர்த்திக்கு அது பரம விலக்ஷணமாயிருக்குமே. களங்கமற்ற பரிபூர்ண சந்திரர்கள் கோடிக்கணக்காக ஏககாலத்திலே தோன்றினால் எவ்வளவு அழகாயிருக்குமோ அவ்வளவு அழகாயிருக்கின்றதாம் அந்த ஸடாபடலம். "அகளங்க பரிபூர்ண...." என்றது அபூதோபமை. சந்த்ரமண்டலம், அகளங்கமாயிருந்தால் பரிபூர்ணமாயிராது ; பரிபூர்ணமாயிருந்தால் அகளங்கமாயிராது, * யத் தாதுஸ் ஸௌம்யதா ஸேயம் பூர்ணேந்தோரகளங்கதா * என்ற கவிவசனத்தினாலும் இது உணரத்தக்கது. [க்ருபாலய] * சீற்றத்தோடருள் பெற்றவனடிக்கீழ்ப் புக நின்ற செங்கண்மால் * (திருவாய்மொழி 3—6—6) என்கிறபடியே இரணியன் திறத்திலே சீற்றம் அளவு கடந்து செல்லா நிற்கச் செய்தேயும் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பக்கலிலே அருளே வடிவெடுத்திருந்தபடியைச் சொல்லுகிறது. [தைத்யவரகால !] தைத்யவரனென்று இரணியனை மாத்திரம் விவக்ஷிக்கவுமாம், தைத்யவரர்களென்று ஆஸுரப்ரக்ருதிகளை வரையும் விவக்ஷிக்கவுமாம். காலன்—ம்ருத்யு. நரஸிம்ஹ நரஸிம்ஹ என்று இரட்டித்துச் சொல்லுகிறது ஆதராதிசயத்தினால். பிறவிக்கடலுள் நின்று துளங்குமடியேனுக்கு தேவரீருடைய திருவருளல்லது வேறு புகலில்லை யென்றதாயிற்று. ... (1)

पादकमलावनतपातकिजनानां पातकदवानल पतत्रिवरकेतो ।
भावनपरायण भवार्तिहरया मां पाहि कृपयैव नरसिंह नरसिंह ॥२॥

பாதகமலாவநத பாதகி ஜநாநாம் பாதகதவாநல பதத்ரிவரகேதோ;
பாவநபராயண! பவார்த்திஹரயா மாம் பாஹி க்ருபயைவ நரஸிம்ஹ நரஸிம்ஹ. (2)

| | | | |
|---|---|---|---|
| பாத கமல அவநத பாதகி ஜநாநாம் | (தனது) திருவடித் தாமரைகளில் வணங்கின பாபிஷ்ட ஜனங்களினுடைய | நரஸிம்ஹ நரஸிம்ஹ | அழகிய சிங்கப் பிரானே ! |
| பாதக தவாநல | பாபங்களுக்குக் காட்டுத் தீப் போன்றவனே !, | பவ ஆர்த்தி ஹரயா | ஸம்ஸாரத் துன்பங்களைப் போக்கவல்ல |
| பதத்ரி வர கேதோ | பக்ஷிராஜனை பெரிய திருவடியைக் கொடியாக வுடையவனே ! | க்ருபயா ஏவ | (தனது) கருணையினாலேயே |
| | | மாம் பாஹி | அடியேனைக் காத்தருள வேணும். |
| பாவந பராயண | தன்னைச் சிந்திப்பவர்களுக்குப் பரகதியா யுள்ளவனே ! | | |

தன்னடிபணிந்தவர்கள் எத்தனை பாவங்கள் செய்திருந்தாலும் "போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்" என்கிறபடியே அவற்றை உருவழிக்க வல்ல பெருமானே! கருளக் கொடியொன்றுடைய கோவே! தன்னைச்சிந்தனை செய்ய வல்லார்க்கு உபாயமும் உபேயமுமாக இருப்பவனே! ஸாம்ஸாரிக க்லேசங்களை யெல்லாம் போக்குமியல்வுடைய திருவருளாலே நித்ய ஸம்ஸாரியான வென்னைக் காத்தருளவேணு மென்றதாயிற்று. * க்ருபயைவ * என்கிற ஏவகாரத்தாலே என்பக்கலில் ஒரு கைம்முதல் எதிர் பார்க்கலாகா தென்கிறது. (2)

http://acharya.org

तुङ्गनखपङ्क्तिदलितासुरवरासृक्पङ्कनवकुङ्कुमविपङ्किलमहोरः ।
पण्डितनिधान कमलालय नमस्ते पङ्कजनिषण्ण नरसिंह नरसिंह ॥३॥

துங்கநக பங்க்திதளிதா ஸுரவராஸ்ருக் பங்க நவகுங்கும விபங்கிலமஹோர:,
பண்டிதநிதாந கமலாலய நமஸ் தே பங்கஜநிஷண்ண நரஸிம்ஹ நரஸிம்ஹ. (3)

| | | | |
|---|---|---|---|
| துங்க நக பங்க்தி | நீண்ட திருவுகிர்வரிசைகளினால் | பண்டித நிதாந, | அறிஞர்கட்கு நிதி போன்றவரே! |
| தளித | பிளக்கப்பட்ட | கமலா ஆலய | பெரிய பிராட்டியார்க்கு இருப்பிடமானவரே! |
| அஸுரவர | ஹிரண்யாஸுரனுடைய | | |
| அஸ்ருக் பங்க | உதிரக்குழம்பாகிற | | |
| நவ குங்கும | புதுமைமாறாத குங்குமச்சாறுதன்னால் | பங்கஜ நிஷண்ண | ஆஸன பத்மத்திலே எழுந்தருளியிருப்பவரே! |
| விபங்கில | வ்யாப்தமாயிருக்கிற | | நரஸிம்ஹ நரஸிம்ஹ !—; |
| மஹா உர: | அகன்ற திருமார்பை யுடையவரே! | தே நம: | உமக்கு வணக்கமாகுக. |

* அங்கண்ஞாலமஞ்ச அங்கோராளரியாய் அவுணன் பொங்கவாகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதன் * என்றும் * போரார்நெடுவேலோன் பொன் பெயரோனாகத்தைக் கூரார்ந்த வள்ளுகிரால் கீண்டு குடல்மாலை சீரார் திருமார்பின் மேல் கட்டிச் செங்குருதி சோராக் கிடந்தானைக் குங்குமத் தோள் கொட்டி ஆராவெழுந்தானரியுருவாய் * என்றுஞ் சொல்லுகிறபடியே இரணியனென்னும் அசுரர் பெருமானுடைய மார்பைத் திருவுகிர்களால் கீண்டருளுங்காலத்திலே அங்குநின்றும் கொழித்திழிந்த உதிரவெள்ளம் குங்குமச் சாறு படிந்தாற் போலே திருமார்பிலே படிந்திருந்ததாம்; அது சொல்லுகிறது முன்னடிகளால். "மஹோரா:" என்கிற முதல் வேற்றுமைச்சொல் ஸம்போதநத்தில் * மஹோர:! * என்று கிடக்கிறபடி.

[பண்டித நிதாந!] அறிவுடையார்கள் * வைத்தமாநிதி * என்றும் * அந்தர்ஹிதோ நிதிரஸி * என்றும் சொல்லும்படியுள்ளவனிறே எம்பெருமான். நிதியானது உள்ளே பதிகிடந்து ஒரு காலவிசேஷத்திலே பாக்யவான்களுக்கு வெளிப்படும்; அப்படியேயிறே நரஸிம்ஹன்படியும். [கமலாலய!] கமலை கேழ்வனே! என்றபடி நரசிங்க வுருக்கொண்ட போது மூவுலகுமஞ்சிக் கலங்கிப் போகும்படியான சீற்றம் உண்டானது கண்டு அதனைத் தணிக்க ஸ்ரீமஹாலக்ஷ்மி வந்து குடிகொள்ள, லக்ஷ்மீந்ருஸிம்ஹனானமை இங்கு நினைக்கத்தக்கது. [பங்கஜ நிஷண்ண!] *. தண்டாமரை சுமக்கும் பாதப் பெருமானென்றபடி. (3)

मौलिषु विभूषणमिवामरवराणां योगिहृदयेषु च शिरस्सु निगमानाम् ।
राजदरविन्दरुचिरं पदयुगं ते धेहि मम मूर्ध्नि नरसिंह नरसिंह ॥४॥

மௌலிஷு விபூஷண மிவாமரவ்ராணாம் யோகிஹ்ருதயேஷு ச சிரஸ்ஸு நிகமாநாம்,
ராஜதரவிந்தருசிரம் பதயுகம் தே தேஹி மம மூர்த்நி நரஸிம்ஹ நரஸிம்ஹ. (4)

| | | | |
|---|---|---|---|
| | நரஸிம்ஹ நரஸிம்ஹ !—; | விபூஷணம் இவ ராஜத் | சிறந்ததொரு பூஷணம் போன்று விளங்குகின்ற |
| அமரவராணாம் மௌலிஷு | சிறந்த தேவர்களின் முடிகளின் மீதும் | அரவிந்த ருசிரம் தே பதயுகம் | தாமரைபோலழகிய தேவரீருடைய திருவடியிணையை |
| யோகிஹ்ருதயேஷு ச | யோகிகளின் உள்ளத்திலும் | | |
| நிகமாநாம் சிரஸ்ஸு ச | வேதாந்தங்களிலும் | மம மூர்த்நி தேஹி | என் சென்னிமீது வைத்தருள வேணும். |

http://acharya.org

* கோலமாமென் சென்னிக்கு உன் கமலமன்ன குரைகழலே * என்றும் * அடிச்சியோந்தலைமிசை நீயணியா யாழியங் கண்ணாவுன் கோலப் பாதம் * என்றும் ஆழ்வார்கள் ப்ரார்த்தித்த கட்டளையிலே ப்ரார்த்திக்கிறாராயிற்று இந்த ச்லோகத்தில். அமரர்களுடைய சென்னிப்பூவாய் விளங்காநிற்பதும், முனிவர்களும் யோகிகளும் உள்ளத்துக் கொண்டு சிந்திக்கப் பெற்றதும் "வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கு" என்கிறபடியே மறைமுடிகளுக்குப் பரமப்ரமேயமாய் விளங்கா நிற்பதுமான தேவரீருடைய திருவடியிணையை என் சென்னிக் கணியாகச் சேர்த்தருள வேணுமென்றாராயிற்று. விபூஷணம் என்பது ஸப்தம்பந்த பதங்களெல்லாவற்றிலும் அந்வயிக்கக்கடவது. (4)

वारिजविलोचन मदन्तिमदशायां क्लेशविवशीकृतसमस्तकरणायाम् ।

एहि रमया सह शरण्य विहगानां नाथमधिरुह्य नरसिंह नरसिंह ॥५॥

**வாரிஜவிலோசந மதந்திமதசாயாம் க்லேசவிவசீக்ருதஸமஸ்தகரணாயாம்,**

**ஏஹி ரமயா ஸஹ சரண்ய விஹகாநாம் நாதமதிருஹ்ய நரஸிம்ஹ நரஸிம்ஹ.** (5)

| | | | |
|---|---|---|---|
| வாரிஜ விலோசந | செந்தாமரைக் கண்ணரே! | மத் அந்திம தசாயாம் | என்னுடைய சரமாவஸ்த்தையிலே |
| சரண்ய | அடியேன் போல்வார்க்குத் தஞ்சமானவரே! | ரமயா ஸஹ | பிராட்டியோடு கூட |
| நரஸிம்ஹ நரஸிம்ஹ !—; | | | |
| க்லேச விவசீக்ருத ஸமஸ்த கரணாயாம் | (செவி வாய் கண் முதலான) ஸமஸ்த கரணங்களையும் க்லேசத்துக்கு வசப்படுத்துமதான | விஹகாநாம் நாதம் அதிருஹ்ய | பெரிய திருவடியின்மேலேறிக் கொண்டு |
| | | ஏஹி | (அடியேன் பால்) வந்தருளவேணும். |

* எய்ப்பென்னைவந்து நலியும்போது அங்கேதும் நானுன்னை நினைக்கமாட்டேன், அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன் * என்கிற கணக்கிலேயருளிச்செய்வது இந்த ச்லோகம். * மேலெழுந்ததோர் வாயுக்கிளர்ந்து மேல்மிடற்றினை யுள்ளெழ வாங்கி, காலுங்கையும் விதிர்விதிர்த்தேறிக் கண்ணுறக்கமதாவது * என்றும், * மடிவழிவந்து நீர்ப்புலன் சோர வாயிலட்டிய கஞ்சியும் மீண்டே, கடைவழிவாரக் கண்ட மடைப்பக் கண்ணுறக்கமதாவது * என்றும், * வாயொருபக்கம் வாங்கிவலிப்ப வார்ந்தநீர்க்குழிக் கண்கள் மிழற்றத் தாயொருபக்கம் தந்தையொருபக்கம் தாரமுமொருபக்கமலற்ற * என்றுஞ்சொல்லுகிறபடியே அந்திமகாலத்தில் நேரும் அவஸ்தைகளுக்கு ஓர் அடைவு இல்லையே, மநோவாக்காயங்களாகிற கரணக்ராமங்களெல்லாம் க்லேசங்களுக்கே வசப்பட்டிருக்கும்படியான அந்த நிலைமையில் * **காஷ்டபாஷாணஸந்நிபம் அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்** * என்ற திருமுகப்பாசுரத்தின்படியே, * பறவையேறு பரம்புருடனுய்ப் பிராட்டியோடுங் கூட வெழுந்தருளிப்பாவியேனைக் கைக்கொண்டருளவேணுமென்று வேண்டினாராயிற்று.

**வாரிஜவிலோசந !** என்று விளித்தது * கிண்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப்போலே செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழித்தருளவேணுமென்று குறிப்பித்தபடி. ... (5)

हाटककिरीटवरहारवनमालातारारशनामकरकुण्डलमणीन्द्रैः ।

भूषितमशेषनिलयं तव वपुर्मे चेतसि चकास्तु नरसिंह नरसिंह ॥६॥

**ஹாடககிரீடவரஹாரவநமாலாதாரரசநாமகரகுண்டலமணீந்த்ரை:,**

**பூஷிதமசேஷநிலயம் தவ வபுர் மே சேதஸி சகாஸ்து நரஸிம்ஹ நரஸிம்ஹ.** (6)



http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| நரஸிமஹ நரஸிம்ஹ | அழகிய சிங்கப்பெருமாளே !, | | |
| ஹாடக கிரீட வர ஹார வநமாலா தார ரசநா மகர குண்டல மணீந்த்ரை: | பொன்மயமான சிறந்த மகுடமென்ன, வைஜயந்தி யென்னும் வனமாலை யென்ன, முத்துமயமான அரைநாணென்ன, திருமகரக் குழைகளென்ன ஆகிய இத் திருவாபரணங்களினல் | பூஷிதம் அசேஷ நிலயம் தவ வபு: மே சேதஸி சகாஸ்து | அலங்கரிக்கப்பட்டதும் எங்கும் வியாபித்ததுமான தேவரீருடைய திருமேனி என்னெஞ்சினுள் விளங்க வேணும். |

* செங்கமலக்கழலில் சிற்றிதழ்போல் விரலில் சேர்திகழாழிகளுங் கிண்கிணியும் அரையில் தங்கிய பொன்வடமும் தாளநன்மாதுளையின் பூவொடு பொன்மணியும் மோதிரமுங் கிறியும் மங்கல வைம்படையும் தோள்வளையுங் குழையும் மகரமும் வாளிகளும் சுட்டியுமான திருவாபரணங்களணிந்த திருமேனியே தமது திருவுள்ளத்தில் திகழவேணுமென்று பிரார்த்தித்தாராயிற்று. [தாரரசநா] தாரமென்று முத்துக்குப் பெயர். நக்ஷத்ரவடமென்கிற திருவாபரணத்தைச் சொல்லவுமாம். [மணீந்த்ரை:] ரத்நவாசகமான இந்த சப்தம் லக்ஷணயா ரத்நப்ரசுரபூஷண வாசகமாகலாம். [அசேஷ நிலயம்] நிலய சப்தம் நித்ய பும்லிங்கமாகையாலே இங்கு பஹுவ்ரீஹியாகக்கடவது. அசேஷத்தையும் நிலயமாகவுடைத்தான என்கை. (6)

इन्दुरविपावकविलोचन रमाया मन्दिर महाभुजलसद्व(द्द)ररथाङ्ग ।
सुन्दर चिराय रमतां त्वयि मनो मे नन्दितसुरेश नरसिंह नरसिंह ॥७॥

இந்துரவிபாவகவிலோசந ரமாயா மந்திர மஹாபுஜலஸத்வராதாங்க,
ஸுந்தர சிராய ரமதாம் த்வயி மநோ மே நந்திதஸுரேச நரஸிம்ஹ நரஸிம்ஹ. (7)

| | | | |
|---|---|---|---|
| இந்து ரவி பாவக விலோசந ! | சந்திரன் ஸூர்யன் அக்நி ஆகிய இவர்களைக் கண்ணாக வுடையவரே ! | ஸுந்தர ! | அழகுபொலிந்தவரே ! |
| | | நந்தித ஸுரேச | அமரர்கோனைத் துயர்தீர்த்தவரே ! |
| ரமாயா: மந்திர ! | பெரிய பிராட்டியார்க்குத் திருக்கோயிலாயிருப்பவரே ! | மே மந: | அடியேனுடைய மனமானது |
| | | | நரஸிம்ஹ நரஸிம்ஹ !—; |
| மஹாபுஜ லஸத் வர ரதாங்க ! | தடக்கையில் விளங்கும் சிறந்த திருவாழியாழ்வானையுடையவரே ! | த்வயி | தேவரீரிடத்தில் |
| | | சிராய ரமதாம் | நெடுங்காலம் உகப்புக்கொண்டிருக்கவேணும். |

நரஸிம்ஹாவதாரத்திலே தீப்பொறிபறக்கும் நெற்றிக்கண்ணென்று மூன்றுவதாகத் தோன்றினபடியால், க்ரமமான இரண்டு திருக்கண்களைச் சந்திரஸூர்யர்களாகவும் மூன்றுவதான அந்த நெற்றிக்கண்ணை அக்நியாகவும் அருளிச் செய்தார் முதல்பாதத்திலே. அந்த நெற்றிக்கண்ணையவிப்பதற்காகவே பிராட்டிவந்து திருமேனியில் வீற்றிருந்தபடியாலே "ரமாயா மந்திர !" என்றார். "மஹாபுஜ லஸத் தர ரதாங்க !" என்றும் பாடமுண்டென்பர்; தரமென்று சங்குக்குப் பெயராதலால் சங்குசக்கரமிரண்டையும் சேரச் சொன்னபடியாகும். ... .... ... (7)

माधव मुकुन्द मधुसूदन मुरारे वामन नृसिंह शरणं भव नतानाम् ।
कामद घृणिन्निखिलकारण नयेयं कालममरेश नरसिंह नरसिंह ॥८॥

மாதவ முகுந்த மதுஸூதந முராரே வாமந ந்ருஸிம்ஹ சரணம் பவ நதாநாம்,
காமத க்ருணிந் நிகிலகாரண நயேயம் காலமமரேச நரஸிம்ஹ நரஸிம்ஹ. (8)

http://acharya.org

| | | | |
|---|---|---|---|
| மாதவ ! | திருமாலே ! | காமத | அபேக்ஷிதங்களை யெல்லா மளிப்பவனே ! |
| முகுந்த ! | முத்தியளிக்கும் பெருமானே ! | க்ருணிந் ! | தயாளுவே ! |
| மதுஸூதந ! | மதுகைடபர்களை மாய்த்தவனே ! | நிகிலகாரண ! | ஸகலகாரண பூதனே ! |
| முராரே ! | (நரகாஸுரவதத்தில்) முரனைக் கொன்றவனே ! | அமரேச ! | அமரர் பெருமானே ! |
| வாமந ! | குறள்கோலப் பிரானே ! | | நரஸிம்ஹ நரஸிம்ஹ !—; (இங்ஙனே உன்திருநாமங்களை வாயார வாழ்த்திக் கொண்டே) |
| ந்ருஸிம்ஹ | நரங்கலந்த சிங்கமே ! | | |
| நதாநாம் சரணம் பவ | அடிபணிந்தவர்களுக்குத் தஞ்சமாவாய் ; | காலம் நயேயம் | என்வாழ்நாளைப் போக்கக் கடவேன். |

"க்ரோசந் மதுமதந நாராயண ஹரே முராரே கோவிந்தேதி அநிசமபநேஷ்யாமி திவஸாந்" என்று பட்டரருளிச் செய்தகட்டளையிலே அருளிச் செய்தபடி. மூன்றாவது பாதத்திலே (இதி) என்று வருவித்துக் கொள்ளவேணும்.

காலம் நயேயம் என்பதற்கு 'யமனையும் அடக்கியாளக்கடவேன்' என்று பொருள் கூறலாமாயினும் அது அத்துணைச் சிறவாது. க்ருணீ—தயாளு. (க்ருணா—தயை ; அதனையுடையவன்—க்ருணீ.) ... ... ... (8)

अष्टकमिदं सकलपातकभयघ्नं कामदमशेषदुरितामयरिपुघ्नम् ।
यः पठति सन्ततमशेषनिलयं ते गच्छति पदं स नरसिंह नरसिंह ॥९॥

அஷ்டகமிதம் ஸகலபாதகபயக்நம் காமதமசேஷதுரிதாமயரிபுக்நம்,
ய: படதி ஸந்ததமசேஷநிலயம் தே கச்சதி பதம் ஸ நரஸிம்ஹ நரஸிம்ஹ. (9)

| | | | |
|---|---|---|---|
| | நரஸிம்ஹ நரஸிம்ஹ !—; | இதம் அஷ்டகம் | எட்டுச்லோகங்களினாலமைந்த இந்த ஸ்தோத்திரத்தை |
| ஸகல பாதக பயக்நம் | ஸகலபாபங்களையும் ஸகல பயங்களையும் போக்கடிப்பதும் | ய: ஸந்ததம் படதி | யாவனொருவன் எப்போதும் கற்கின்றானோ |
| காமதம் | ஸகலாபேக்ஷிதங்களையு மளிப்பதும் | ஸ: | அவ்வதிகாரி |
| அசேஷ துரித ஆமய ரிபு க்நம் | ஸகலவிதமான பாபங்களையும் பிணிகளையும் பகைவர்களையும் நிரஸிப்பதுமான | அசேஷ நிலயம் தே பதம் கச்சதி | அனைவர்க்கும் ப்ராப்யமான தேவரீருடைய திவ்யஸ்தானத்தை அடைந்திடுவான். |

இதனால் இந்த ஸ்தோத்ரம் கற்றார்க்குப் பலன் சொல்லித் தலைகட்டுகிறார். முதல் பாதத்தில் பாதகமென்றது மஹாபாதகங்களை ; இரண்டாவது பாதத்தில் துரிதமென்றது உபபாதகங்களை—என்று கொள்ளலாமாகையாலே புநருக்தியில்லை. அநிஷ்ட நிவாரணம் இஷ்டப்ராபணம் ஆகிற இரண்டுக்கும் கடவதான இந்த ஸ்தோத்ரத்தை நிச்சலும் பாடுவார் நீள்விசும்பாள்வர் என்று பேறு கூறித் தலைக்கட்டினாராயிற்று. (9)

வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயர் அருளிச்செய்த

## நரஸிம்ஹாஷ்டகத்திற்கு

**ஸ்ரீகாஞ்சீ. அண்ணங்கராசாரியர் இயற்றிய உரை முற்றிற்று.**

http://acharya.org

ஸ்ரீ:

# காஞ்சீ. திவ்யதேச ஸங்க்ரஹ ச்லோகமாலிகை.

ஸ்ரீகாஞ்சீ. தேவப்பெருமாள் ஸந்நிதி விஷயமான

**முக்தக ச்லோகங்கள்.**

மணவாளமாமுனிகள் திவ்யதேச யாத்திரையடைவில் முதல்பர்யாயமாகப் பெருமாள் கோயிலுக் கெழுந்தருளினபோது அருளிச்செய்தவை.

श्रीमद्द्वारवरं महद्धि बलिपीठाग्र्यं फणीन्द्रहृदं गोपीनां रमणं वराहवपुषं श्रीभट्टनाथं मुनिम् ।
श्रीमन्तं शठवैरिणं कलिरिपुं श्रीभक्तिसारं मुनिं पूर्णं लक्ष्मणयोगिनं मुनिवरानाद्यानथ द्वारपौ ॥
श्रीमन्मज्जनमण्डपं सरसिजां हेतीशभोगीश्वरौ रामं नीलमणिं महानसवरं तार्क्ष्यं नृसिंहं श्रियम् ।
सेनान्यं करिभूधरं तदुपरि श्रीपुण्यकोट्यां हरिं तन्मध्ये वरदं रमासहचरं वन्दे तदीयैर्वृतम् ॥

ஸ்ரீமத் த்வாரவரம் மஹத்தி பலிபீடாக்ர்யம் பணீந்த்ரஹ்ரதம்
கோபீநாம் ரமணம் வராஹவபுஷம் ஸ்ரீபட்டநாதம் முநிம்,
ஸ்ரீமந்தம் சடவைரிணம் கலிரிபும் ஸ்ரீபக்திஸாரம் முநிம்
பூர்ணம் லக்ஷ்மணயோகிநம் முநிவராந் ஆத்யாந் அத த்வாரபௌ
ஸ்ரீமந்மஜ்ஜநமண்டபம் ஸரஸிஜாம் ஹேதீசபோகீச்வரௌ
ராமம் நீலமணிம் மஹாநஸவரம் தார்க்ஷ்யம் ந்ருஸிம்ஹம் ச்ரியம்,
ஸேநாந்யம் கரிபூதரம் ததுபரி ஸ்ரீபுண்யகோட்யாம் ஹரிம்
தந்மத்யே வரதம் ரமாஸஹசரம் வந்தே ததீயைர் வ்ருதம்.

தேவப்பெருமாள் ஸந்நிதியினுட் புகுந்தது முதல் மங்களாசாஸநம் செய்யப்பட்ட ஸகலஸந்நிவேசங்களும் இந்தச்லோகத்தில் அருளிச்செய்யப்பட்டன. 1. கோயில் திருவாசல். 2. மஹாபலிபீடம். 3. திருவனந்தபுஷ்கரிணி. 4. வேணுகோபாலன். 5. ஞானப்பிரான். 6. பட்டர்பிரான் (பெரியாழ்வார்). 7. நம்மாழ்வார். 8. கலியன். 9. திருமழிசைப்பிரான். 10. எம்பெருமானார். 11. முதலாழ்வார்கள். 12. த்வாரபாலகர்கள். 13. அபிஷேக மண்டபமென்று வழங்கப்படுகிற திருமஞ்சன மண்டபம். 14. பெருந்தேவித்தாயார். 15. திருவாழியாழ்வான். 16. திருவனந்தாழ்வான். 17. சக்கரவர்த்தி திருமகன். 18. கரியமாணிக்கப்பெருமாள். 19. திருமடைப்பள்ளி. 20. பெரிய திருவடி. 21. அழகிய சிங்கர். 22. சூடிக்கொடுத்த நாச்சியார். 23. ஸேநாபதியாழ்வான். 24. திருவத்திமாமலை. 25. அதனுச்சியில் புண்யகோடி விமானத்தில் அடியார்கள் புடைசூழ நின்று காட்சிதரும் பெருந்தேவி மணவாளனை பேரருளாளன். ஆக இவர்களை யெல்லாம் தொழுதபடி சொல்லிற்றாயிற்று.

ஸ்ரீகாஞ்சீபுரியிலுள்ள அஷ்டாதச திவ்யதேசங்களென்று ப்ரஸித்தமான பதினெட்டு திவ்ய ஸ்தலங்களை மங்களாசாஸநம் செய்தருளின ச்லோகங்கள்.

http://acharya.org

देवाधीशनृसिंह पाण्डवमहादूतप्रवालप्रभान् श्रीवैकुण्ठपतिं त्रिविक्रमहरिं नीरेशमेघेश्वरौ ।
नीलव्योमविभुं महोरगहरिं ज्योत्स्नेन्दुवक्त्रं हरिं चोरेशं कृतचिन्तभक्तहृदयावासं मुकुन्ताह्वयम् ॥
कामावासपतिं नृकेसरिवरं दीपप्रकाशप्रभुं श्रीयुक्ताष्टभुजास्पदेशमनघं श्रीमद्यथोक्तक्रियम् ।
इत्यष्टादशदिव्यमङ्गलवपुर्देवान् सरोयोगिना साकं निस्तुलकाञ्च्यभिख्यनगरीनाथान् नमामस्सदा ॥

தேவாதீசந்ருஸிம்ஹபாண்டவமஹாதூதப்ரவாலப்ரபாந்
ஸ்ரீவைகுண்டபதிம் த்ரிவிக்ரமஹரிம் நீரேசமேகேச்வரௌ,
நீலவ்யோமவிபும் மஹோரகஹரிம் ஜ்யோத்ஸ்நேந்துவக்த்ரம் ஹரிம்
சோரேசம் க்ருதசிந்தபக்தஹ்ருதயாவாஸம் முகுந்தாஹ்வயம்.
காமாவாஸபதிம் ந்ருகேஸரிவரம் தீபப்ரகாசப்ரபும்
ஸ்ரீயுக்தாஷ்டபுஜாஸ்பதேசமநகம் ஸ்ரீமத்யதோக்தக்ரியம்,
இத்யஷ்டாதச திவ்யமங்கலவபுர்தேவாந் ஸரோயோகிநா
ஸாகம் நிஸ்துலகாஞ்ச்யபிக்யநகரீநாதாந் நமாமஸ் ஸதா.

காஞ்சியில் ஆழ்வார் பாடல்பெறாத புராணஸ்தலங்களும் சிலவுண்டு; அவற்றையும் சேர்த்தே "கச்சியில் பதினெட்டு திவ்ய க்ஷேத்ரங்கள்" என்றொரு மூதுரை வழங்குகின்றது. அந்தப் பதினெட்டு ஸ்தலங்களும் இவ்விரண்டு ச்லோகங்களில் அநுஸந்திக்கப்பட்டிருக்கின்றன. முதலாழ்வார்களில் முதல்வரான பொய்கையாழ்வார் அவதரித்ததும் காஞ்சியிலேயாதலால் அவ்வாழ்வாரோடு சேர்த்து மங்களாசாஸநம் செய்திருக்கிறபடி.

1. தேவப்பெருமாள். 2. அழகிய சிங்கர். 3. பாண்டவதூதர். 4. பவழவண்ணர். 5. ஸ்ரீவைகுண்டநாதன் (பரமேச்சுரவிண்ணகரம்). 6. உலகளந்த பெருமாள். 7. நீரகத்தான். 8. காரகத்தான். 6. கார்வானத்துள்ளான். 10. ஊரகத்தான். 11. நிலாத்திங்கள் துண்டத்தான். 12. கள்வர். 13. உள்ளுவாருள்ளத்தான். 14. முகுந்தப் பெருமாள். 15. வேளுக்கை ஆளழகிய சிங்கர். 16. விளக்கொளி யெம்பெருமான். 17. அட்டபுயகரத்தான். 18. சொன்னவண்ணஞ் செய்தபெருமாள் (திருவெஃகா) ஆகப் பதினெண்பெருமாள்களையும் பொய்கையாழ்வாரையும் எஞ்ஞான்று இறைஞ்சுகின்றோமென்றதாயிற்று. .... ... *

## காஞ்சீ திவ்யதேச ஸங்க்ரஹ ச்லோகமாலிகை

முற்றிற்று.

மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:

## சோளஸிம்ஹபுரம் தொட்டயாசார்ய ஸ்வாமி தேவப்பெருமாளுடைய பெரிய திருவடி மஹோத்ஸவ விஷயமாகப் பணித்த

# தேவாதிராஜ பஞ்சகம்.

### அவதாரிகை.

“தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த அக்காரக் கனியை யடைந்துய்ந்துபோனேனே” என்று திருமங்கையாழ்வாருடைய மங்களாசாஸனம்பெற்ற திருக்கடிகையென்னும் சோளஸிம்ஹபுரத்தில் மஹா வித்வச்சிகாமணியா யெழுந்தருளியிருந்த தொட்டயாசார்ய ஸ்வாமி ஸம்வத்ஸரந்தோறும் தேவப்பெருமாளுடைய வையங்கண்ட வைகாசித் திருநாளுக்குக் கச்சிப்பதியேற வெழுந்தருளி அத்தாணிச்சேவகம் செய்து மகிழ்வது வழக்கம்; ஒரு ஸம்வத்ஸரம் எழுந்தருள ஸௌகர்யமற்று, மூன்றுநாள் பெரிய திருவடி ஸேவைக்காவது எழுந்தருளவேணுமென்று பாரித்திருக்கையில் அது தனக்கும் க்ஷமரன்றிக்கே அன்று பின்மாலை யெழுந்து தக்கான்திருக்குளத்திலே அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு “அத்தியூரான் புள்ளையூர்வான்” என்கிற பூதத்தாழ்வார் பாசுரத்தையே சிந்தித்து வாயார வேத்தியிருக்கையில் இப்பெரியாருடைய பரம பக்திக்கு உகந்த பேரருளாளன் கச்சி நகரில் காட்சி தந்தருள்வதுபோலவே அங்கு இவர்க்கு ஸேவை ஸாதித்தருள, அப்போது அநுபவபரீவாஹரூபமாக அவதரித்தது இந்த தேவாதிராஜ பஞ்சகம். இந்த ஐந்து ச்லோகங்களிலும் பெரிய திருவடி வாஹனத்தின் பெருமை யொன்றே பேசப்பட்டுள்ளது.

### க்ரந்தாரம்பம்.

प्रत्यूषे वरदः प्रसन्नवदनः प्राप्ताभिमुख्यान् जनान् आबद्धाञ्जलिमस्तकानविरलानाबालमानन्दयन् ।
मन्दोड्डायितचामरो मणिमयश्वेतातपत्रःशनैः अन्तर्गोपुरमाविरास भगवानारूढपक्षीश्वरः ॥१॥

ப்ரத்யூஷே வரத: ப்ரஸந்நவதந: ப்ராப்தாபிமுக்யாந் ஜநாந்
ஆபத்தாஞ்ஜலிமஸ்தகாந் அவிரலாந் ஆபாலமாநந்தயந்,
மந்தோட்டாயிதசாமரோ மணிமயச்வேதாதபத்ரச் சநை:
அந்தர்கோபுரமாவிராஸ பகவாந் ஆரூடபக்ஷீச்வர:. (1)

| | | | |
|---|---|---|---|
| ப்ரத்யூஷே | ஸுப்ரபாத காலத்தில் | ஆபாலம் ஆநந்தயந் | சிறுவர்முதற்கொண்டு ஸந்தோஷப் படுத்துமவராய் |
| ப்ரஸந்நவதந: பகவாந் வரத: | ஸுப்ரஸந்நமான திருமுக மண்டலத்தையுடைய பேரருளாளப் பெருமாள் | ஆரூட பக்ஷீச்வர: | பெரியதிருவடியை வாஹனமாகக் கொண்டவராய் |
| ப்ராப்த ஆபிமுக்யாந் | அபிமுகர்களாயும் | மந்த உட்டாயித சாமர: | மெதுவாக வீசப்பட்ட சாமரங்களையுடையவராய் |
| ஆபத்த அஞ்ஜலி மஸ்தகாந் | * மத்தகத்திடைக் கைகளைக் கூப்பினவர்களாயும் | மணிமய ச்வேத ஆதபத்ர: | ரத்னமயமான வெண்கொற்றக் குடையையுடையவராய் |
| அவிரலாந் ஜநாந் | இடை வெளி யில்லாமல் நெருங்கியிருப்பவர்களாயுமுள்ள ஜனங்களை | சநை: | மெல்ல மெல்ல |
| | | அந்தர் கோபுரம் ஆவிராஸ | திருக் கோபுரத்தினுள் தோன்றியருளினர். |

தேவப்பெருமாளுடைய பெரிய திருவடித் திருநாளை ப்ரதம பரிஸ்பந்தமே பிடித்து அநுபவிக்கிறார். அருணோதய வேளையில் அபிமத ஜநதர்சநாநந்த வேகத்தாலே அர்ச்சாவதாரஸமாதியைக் கடந்து விம்மி வெளிவிழுகின்ற அவ்யக்தமதுரமந்தஹாஸ விலாஸத்தோடு கூடின திருமுக மண்டலம் பொலிந்த தேவப்பெருமாள் “சிரஸ்யஞ்ஜலிமாதாய” என்றும் “மத்தகத்திடைக் கைகளைக்கூப்பி” என்றுஞ் சொல்லுகிறபடியே உச்சிமிசைக் கரம்வைத்துத் தொழுமவர்களாய் அஹமஹமிகயாவந்து நெருக்குவாரிடையே அகப்பட்டுத் துடிப்பவர்களான அடியார்களைச் சிறியார் பெரியாரென்கிற வாசியின்றிக்கே [ஜநிதர்மாக்களை யெல்லாம்] உகப்பியா நின்றுகொண்டு “காய்சினப் பறவையூர்ந்து பொன்மலையின் மீமிசைக் கார்முகில்போல்” என்கிறபடியே பறவையேறு பரம்புருடனைப் திருவெண்

http://acharya.org

தொற்றக்குடை பிடிக்குமழகும் சாமரை வீசுமழகும் பொலிய கோபுரஸேவைதந்தருளு மாறு எழுந்தருளின அழகு என்னே! என்று ஈடுபடுகிறார். (1)

मुक्तातपत्रयुगलोभयचामरान्तर्विद्योतमानविनतातनयाधिरूढम् ।
भक्ताभयप्रदकराम्बुजमम्बुजाक्षं नित्यं नमामि वरदं रमणीयवेषम् ॥२॥

முக்தாதபத்ரயுகலோபயசாமராந்தர் வித்யோதமாநவிநதாதநயாதிரூடம்,
பக்தாபயப்ரதகராம்புஜமம்புஜாக்ஷம் நித்யம் நமாமி வரதம் ரமணீயவேஷம். (2)

| | | | |
|---|---|---|---|
| முக்தாதபத்ர யுகல | இரண்டு முத்துக்குடைகளென்ன | பக்த அபயப்ரத கராம்புஜம் | அடியார்களுக்கு அபயமளிக்கும் திருக்கைத் தாமரையையுடையவனும் |
| உபய சாமர அந்த: | இரண்டு சாமரைகளென்ன இவற்றினுள்ளே | | |
| | | அம்புஜாக்ஷம் | செந்தாமரைக் கண்ணனும் |
| வித்யோதமாந- | விளங்கா நின்ற | ரமணீய வேஷம் | மனோஹரமான திவ்யாலங்காரங்களையுடையனுமான |
| விநதா தநய- | வைநதேயனென பெரிய திருவடியின்மீது | | |
| | | வரதம் | பேரருளாளனை |
| அதிரூடம் | ஏறி வீற்றிருப்பவனும் | நித்யம் நமாமி | இடையறாது வணங்குகின்றேன். (2) |

केचित्तत्त्वविशोधने पशुपतौ पारम्यमाहुः परे व्याजह्रुः कमलासने नयविदामन्ये हरौ सादरम् ।
इत्येवं चलचेतसां करधृतं पादारविन्दं हरेः तत्त्वं दर्शयतीव संप्रति नृणां तार्क्ष्यः श्रुतीनां निधिः ॥३॥

கேசித் தத்வவிசோதநே பசுபதௌ பாரம்யமாஹு: பரே
வ்யாஜஹ்ரு: கமலாஸநே நயவிதாம் அந்யே ஹரௌ ஸாதரம்,
இத்யேவம் சலசேதஸாம் கரத்ருதம் பாதாரவிந்தம் ஹரே:
தத்வம் தர்சயதீவ ஸம்ப்ரதி ந்ருணாம் தார்க்ஷ்ய: ச்ருதீநாம் நிதி:. (3)

| | | | |
|---|---|---|---|
| தத்வவிசோதநே | பரதத்வமின்னதென்று ஆராயுமளவில், | (இப்படி பலரும் பலவாறாகச் சொல்லுகின்றார்களே; ஒரு விதமான நிஷ்கர்ஷமில்லையே!) | |
| நயவிதாம் | சாஸ்த்ர மறிந்தவர்களுக்குள்ளே | இதி ஏவம் சலசேதஸாம் ந்ருணாம் | என்று தளும்பின நெஞ்சையுடையரான மனிசர்க்கு (தெளிவுபிறப்பிக்கவேண்டி) |
| கேசித் | சிலமதஸ்தர்கள் | | |
| பசுபதௌ பாரம்யம் ஆஹு: | ருத்ரனிடத்தில் பரத்வத்தைக் கூறினர்; | ச்ருதீநாம் நிதி: தார்க்ஷ்ய: | வேதங்களுக்கு நிதியான பெரியதிருவடியானவர் |
| பரே | வேறுசிலர் | ஸம்ப்ரதி | இப்போது [இத்திருநன்னாளிலே] |
| கமலாஸநே பாரம்யம் வ்யாஜஹ்ரு: | நான்முகக் கடவுளிடத்தில் பரத்வமுள்ளதாகப் பகர்ந்தார்கள்; | கரத்ருதம் | தம்முடைய கைத்தலத்திலே தாங்கப் பட்ட |
| அந்யே | மற்றையோர்கள் | ஹரே: பாதாரவிந்தம் | எம்பெருமானுடைய திருவடித் தாமரையை |
| ஸாதரம | ஆதரத்தோடுகூட | | |
| ஹரௌ பாரம்யம் ஆஹு: | ஸ்ரீமந் நாராயணனிடத்தில் பரத்வமுள்ளதாகச் சொன்னார்கள்; | தத்வம் தர்சயதி இவ | பரதத்துவமாகக் காட்டுகின்றார் போலும். |

பெரிய திருவடி பேரருளாளனுடைய திருவடித் தாமரையிணையைத் தன் கைத்தலத்திலே ஏந்திக்கொண்டு வருவதை நோக்கி ஒரு உத்ப்ரேக்ஷை பண்ணுகிறார் இந்த ச்லோகத்தில். ஸம்யங்ந்யாயாநுக்ருஹீத ப்ரமாண பராமர்சத்தாலும் ஸதாசார்ய ஸேவையாலும் ஸந்தேஹ விபர்யயமறப் பரதத்வத்தை நிஷ்கர்ஷித்துணர வல்லமையின்றிக்கே சஞ்சல புத்திகளாயுள்ளவர்களுக்கு ஒரு தெளிவைப் பிறப்பிக்க வெண்ணின வேதாத்மாவான விஹங்கேச்வரன் ஸ்ரீமந்நாராயணனுடைய இந்தத் திருவடித் தாமரையே காணீர் பரதத்வம்!” என்று கரஸ்தமாக்கிக் காட்டுகிறாப்போலுள்ளது என்றாராயிற்று. ஒரு பக்ஷி காட்டிவிட்டால் இதையே தத்துவமாக விச்வஸிக்க விருண்டோவென்கிற சங்கைக்கு இடமில்லாதபடி “ச்ருதீநாம் நிதி:” என்று கருத்மானுக்கு விசேஷணமிட்டார். “வேதாத்மா விஹகேச்வர:” என்று ஆளவந்தாருமருளிச் செய்தார். * ஸுபர்ணோஸி கருத்மாந் த்ரிவ்ருத்தே சிர: * இத்யாதி வேதவாக்யமும் இங்கு அநுஸந்தேயம். (3)

http://acharya.org

यद्वेदमौलिगणवेद्यमवेद्यमन्यैः यद्ब्रह्मरुद्रसुरनायकमौलिवन्द्यम् ।
तत्पद्मनाभपदपद्ममिदं मनुष्यैः सेव्यं भवद्भिरिति दर्शयतीव तार्क्ष्यः ॥४॥

யத் வேதமௌலிகணவேத்யமவேத்யமந்யை: யத் ப்ரஹ்மருத்ரஸுரநாயகமௌலிவந்த்யம்,
தத் பத்மநாபபதபத்மமிதம் மநுஷ்யை: ஸேவ்யம் பவத்பிரிதி தர்சயதீவ தார்க்ஷ்ய: (4)

| | | | |
|---|---|---|---|
| (ஓ வைதிக ஜனங்களே !) | | ப்ரஹ்ம ருத்ர ஸுர நாயக மௌலி வந்த்யம் | பிரமன், சிவன், இந்திரன் ஆகிய இவர்கள் முடிதாழ்த்தி வணங்கக் கூடியதோ, |
| யத் பத்மநாப பத பத்மம் | எம்பெருமானுடையதான எந் தத் திருவடியானது | தத் இதம் | அப்படிப்பட்ட இந்தத் திருவடியானது |
| வேதமௌலி கண வேத்யம் | வேதாந்தங்களுக்கே அறியக் கூடியதோ | பவத்பி: ஸேவ்யம் இதி | உங்களால் ஸேவிக்கத் தகுந்தது என்று |
| அந்யை: அவேத்யம் | (வைதிகர்களல்லாத) மற்றையோர்க்கு அறியக் கூடாததோ, | தார்க்ஷ்ய: தர்சயதி இவ | கருத்மான் (கையிலேந்திக்) காட்டுகின்றான் போலும். |
| யத் | யாதொரு திருவடியானது | | |

प्रत्यग्गोपुरसंमुखे दिनमुखे पक्षीन्द्रसंवाहितं नृत्यच्चामरकोरकं निरुपमच्छत्रद्वयीभासुरम् ।
सानन्दं द्विजमण्डलं विदधतं सन्नाहचिह्नारवैः कान्तं पुण्यकृतो भजन्ति वरदं काञ्च्यां तृतीयोत्सवे ॥५॥

ப்ரத்யக்கோபுரஸம்முகே திநமுகே பக்ஷீந்த்ரஸம்வாஹிதம்
ந்ருத்யச்சாமரகோரகம் நிருபமச்சத்ரத்வயீபாஸுரம்,
ஸாநந்தம் த்விஜமண்டலம் விதததம் ஸந்நாஹசிஹ்நாரவை:
காந்தம் புண்யக்ருதோ பஜந்தி வரதம் காஞ்ச்யாம் த்ருதீயோத்ஸவே. (5)

| | | | |
|---|---|---|---|
| காஞ்ச்யாம் | திருக்கச்சிமாநகரில் | ஸந்நாஹ சிஹ்ந ஆரவை: | புறப்பாடு ஸித்தமாயிற்றென்று தெரிவிக்கிற திருச்சின்ன வொலியினால் |
| த்ருதீய உத்ஸவே | மூன்றாவது உத்ஸவ நன்னாளில் | த்விஜ மண்டலம் ஸாநந்தம் விததம் | மறையவர் திரளை மகிழச்செய்பவரும் |
| திநமுகே | ஸுப்ரபாத வேளையில் | காந்தம் | மிக அழகுபொருந்தியவருமான |
| பக்ஷீந்த்ர ஸம்வாஹிதம் | பெரிய திருவடியினால் தாங்கப்பட்டவரும் | வரதம் | பேரருளாளப் பெருமாளை |
| ந்ருத்யத் சாமர கோரகம் | சாமரமுகுளம் வீசப்பெற்றவரும் | புண்யக்ருத: | பாக்யசாலிகள் |
| நிருபமச் சத்ர த்வயீ பாஸுரம் | ஒப்பற்ற இரண்டு திருக்குடைகளினிடையே விளங்காநிற்பவரும் | ப்ரத்யக் கோபுர ஸம்முகே | மேலைத் திருக்கோபுர வாசலில் |
| | | பஜந்தி | ஸேவிக்கப்பெறுகிறார்கள். |

"தந்யா: பச்யந்தி மே நாதம்" என்று பிராட்டி வருந்திச் சொன்னதுபோல இங்குப் "புண்யக்ருதோ பஜந்தி" என்று தம் இழவுதோற்றச் சொல்லியிருக்கையாலே, இந்த மஹோத்ஸவஸேவை தமக்கு ப்ராப்தமாகப் பெறாதகாலத்திலே பணித்தது இந்தச்லோக பஞ்சகமென்று விளங்குகின்றது. (5)

சோளஸிம்ஹபுரம் தொட்டயாசார்யர் பணித்த

**ஸ்ரீ தேவராஜ பஞ்சகத்திற்கு**

ஸ்ரீகாஞ்சீ அண்ணங்கராசாரியர் இயற்றிய உரை முற்றிற்று.

http://acharya.org